# THE NADAR KULA MITRAN.

அருப்புக்கோட்டை நாடார் கல்விப் பிரசங்க சபையினின்று வெளிவரும்.

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்" (திருக்குறள்)

பத்திராதிபர், சு. ஆ. முத்துநாடார் பத்திராசிரியர்

நாடார்குல மித்திரன் சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு வருடம் 1-க்குரூ 3-8-0.

சிங்கப்பூர், பினாங்கு, மலாக்கா முதலிய வெளிநாட்டிற்கு வருடம் 1-க்கு ரூபா 4-0-0.

நாடார்குல மித்திரன் விளம்பர விகிதம்.

கலம் 1-க்கு தடவை 1-க்கு ரூபா 6-0-0.

சில்லரை விளம்பரம் அங்குலம் 1-க்கு ரூ 0-4-0

நீண்டகாலம் விளம்பரஞ் செய்வோர் மானேஜருக்கு எழுதவும்.

மலர் 4 ] ருத்ரோத்காரி ஹு ஆடிமீ 17உ புதன்கிழமை (அருப்புக்கோட்டை) 1923ஹு ஆகஸ்டுமீ 1உ [ இதழ் 34



நாடார்குல மித்திரன்,

## புத்தகசாலை.

புத்தக விபரம்.

| | |
|---|---|
| அலரியா நாடார் ஜீவிய சரித்திரம் | 0—8—0 |
| மகாமாயன் நாவல் | 0—8—0 |
| சேனம் திர காரநி காவல் | 0—12—0 |
| அலரியா நாடார் போட்டோ படம் | 0—3—0 |
| ஸ்ரீ முத்துமாரியம்மன் பதிகம் | 0—1—6 |
| நடராஜப் பதிகம் | 0—1—6 |
| ஸ்ரீ முத்துமாரியம்மன் திருவிழாச்சிந்து | 0—1—6 |
| செல்வரசக் கீர்த்தனை | 0—3—0 |
| நாடார் மகாஜன சங்கீத மஞ்சரி | 0—4—0 |
| 5-வது நாடார் மகாஜன சங்க கான்பரன்ஸ் ரிப்போர்டு | 0—4—0 |
| நமது குலத்தொழில் யாது | 0—5—0 |
| விகட வேசியர்மாலை | 0—1—6 |
| நாடார் மகாஜன சங்க பஹுத்துவ ரத்தினம் | 0—2—0 |
| திருக்கல்யாண ஊஞ்சல் பாட்டு | 0—1—0 |

குறிப்பு:—8-அணுவுக்கு குறைவான விலையுள்ள புத்தகங்கள் வி. பி. யில் அனுப்பப்பட மாட்டாது. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

மொத்தமாக வாங்குவோர்க்கு தக்ககமிஷன் கழித்துக் கொடுக்கப்படும். விபரத்திற்கு எழுதவும்.

விலாசம்:—

நாடார்குல மித்திரன் "புத்தகசாலை"
நாடார் ஹைஸ்கூல் ரோடு,
அருப்புக்கோட்டை.





சமீபித்து விட்டது!

## ஐந்தாவது ஆண்டு.

நாடார்குல மித்திரன்

## வாரப் பதிப்பு.

புதிய சந்தாதாராய்ச்சேருவதற்கு ஏற்றதருணம் இதுவே!!

வருகிற செப்டம்பர் மாதம் முதல் தேதியிலிருந்து வாரமொரு தடவையாக வெளியிடப்படும். இஃது இனி குல விஷய வியாசங்களையும், குறிப்புக்களையும், உடனுக்குடன் கொண்டுவருவதோடு தேசீய விஷயங்களையும், பொதுவர்த்தமானங்களையும், அந்நிய நாட்டு விஷயங்களையும் தந்தி பந்திகளையும் தாராளமாய்த் தாங்கிவரும். புதிய சந்தாதாரர்களாய்ச் சேர்ந்து பத்திரிகையைப் பலப்படுத்துங்கள். பழைய சந்தாதார் ஒவ்வொருவரும் இரண்டு புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுத்தால் மித்திரன் 6-வது ஆண்டில் வாரமிருமுறையாக வெளிவருவானென்பது திண்ணம்.

குறிப்பு; இனி பத்துப் பக்கங்களுடனும், அடிக்கடி விசேஷ அநுபந்தங்களுடனும் காலந் தவறாமல் வெளிவந்து உலாவும்.

மானேஜர்,
நாடார்குல மித்திரன் ஆபீஸ்
அருப்புக்கோட்டை.



தந்தி விலாசம். "மூக்குத்தூள்"

தபால் பெட்டி 555.

உலகெங்கும் புகழ்பெற்ற

## பட்டணம் பொடி

காரம், நிறம், வாடை, குணம், மணம் இவ்வைந்தும் ஒருங்கே அமையப் பெற்று தினசரி நூற்றுக்கணக்கான பார்சல்கள் அனுப்பப்பட்டு தங்கமெடல் வெள்ளி மெடல் பரிசுபெற்று தினசரி நற்சாக்ஷிகள் குவிகின்றன.

என். வி. ஷண்முகம் கம்பெனியார்,
பட்டணம் பொடி தொழிற்சாலை,
மதராஸ்.


Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## சந்தைக்கிரயஏற்றம்.

வா அடியிற்கூறுகிற கேள்விக்கு வாசிக்கிறது, ஆயினும் இருவருடைய சத்தம்மாத்திரம் அமைதியான அவ்விரவில் கேட்கிறது. சுற்றத்திரண்டு பிராயமுள்ள ஒரு ஸ்திரீ "ஆ! இரக்கமற்ற தெய்வமே! நான் என் செய்வேன்" என்று உளறி உளறிச் சொல்லுகிறாள். "இரவுப் பொழுதை மிஞ்சிய துக்கத்தோடெழிக்கவேண்டியது எனது விதியே" என்னும் மொழிகள் 45 வயதேயாயினும் சஞ்சலத்தால் கிழத்தோற்றமடைந்திருந்த மனிதனின் வாயிலிருந்து வருகின்றன. ஸ்திரி "கடவுள் நமக்கு மூன்று பெண்குழந்தைகளை த்தந்து இவ்வாறு ஏன் தீராத் தொல்லைக்கு நம்மை ஆளாக்கவேண்டும்! குறைந்தது மூவாயிரம் ரூபாய் பார்ப்பது எப்போ? பெண்களைக்கடத்துவது எப்போ?" என்கிறாள். இதைக்கேட்டமனிதன் பெருமூச்சு விட்டுக்கொண்டு "மூத்தமகளுக்காக 2000 ரூ பெருமான சொத்துக்களை 1500 ரூபாய்க்கு விற்றேன் அப்படியிருந்தும் குடியிலும் வீண்செலவுசெய்வதிலும் எவரையும் வெல்லத்தக்கவனை த்தரு மருமகனையே கண்டுபிடித்தேன். மற்றப் பிள்ளைகளுக்கு என்ன செய்வேன்" என்கிறான். அதற்கு மறுமொழியாக அவன் மனைவி "நித்திரையின்றி இராப்பொழுதைக் கழிப்பதிலும் வேறு வழியில்லை" என்று சொல்லுகிறாள்.

வயது அதிகமானதால் தனது இயற்கையழகையும் பளபளப்பையும் இழந்த மாது ஒருத்தியின் கன்னங்களில் அருவியாய்க் கண்ணீர் ஓடுகிறது. அவள் வாயிலிருந்து வார்த்தை யொன்றும் பிறக்கவில்லை. ஆயினும் அவளது கண்களில் பெருகும் நீரும், அவள் நடந்துகொள்ளும் விதமும் அவளது எண்ணத்தைச் சரியாய் வெளிப்படுத்துகின்றன. "நான் ஏன் ஒரு பெண்ணைப்பிறந்தனளது பாவமறியாப்பெற்றோர்க்கு ஆருத்தியாம் வருவிக்கவேண்டும்? ஆ! ஈசா! நோய்ப்பிணியை யனுப்பி என்னை எடுத்துக்கொள்ளமாட்டீரா? இந்த நாடார் குலத்தில் நான் ஏன்தான் பிறந்தேனோ? என்பதாய் அவள் நினைக்கிறாள். அவள் இவ்வாறு சாவை விரும்பி தன்னையும் தனது குலத்தையுஞ்சபித்து நாட்கழிக்கிறாள்.

இதை வாசிக்கிறவர்கள் மேற்கூறிய வைகளின் காரியத்தை அறிவார்களென நம்புகிறேன். மேற்கூறிய அங்கலாய்ப்புக்குக் காரணமாயிருக்கும் வழக்கத்தின் ஆரம்பகாலத்தை யான் அறிகிலேன். நிச்சயமாக இவ்வழக்கம் யாவருக்கெல்லாம் நன்மை பயப்பதே. அவ்வாறிருப்பதற்கு ஞானமான காரணம் ஒன்றும் எனக்குத் தெரியாது. ஒருவனை ஆணாய்ப் பிறந்ததும் புண்ணியபெண்ணாய் அப்படிப்பிறந்தது தர்செயலானவையாம் சம்பவமே. பெற்றோரைத் தலைவர்களாக தனது மாமனைக் கடமையாகக் கவலை புத்திமானாகி வயதிலும் வாலிபத்திலும் அந்தகே. நாடார் மாப்பிள்ளைகளின் சந்தைக்கிரயம் ஏறிக்கொண்டேபோகிறது. மாப்பிள்ளை ரொக்கம் வாங்கும் வழக்கத்துக்கு அநுகூலமாய்ச் சொல்லப்படுங்காரணங்கள் சரியானவையென்று ஒரு நல்லமனுஷனும் சொல்லமாட்டான். இவ்வழக்கத்தாலுண்டாகும் கேடுகள் பல வுள.

ஏழை ஜனங்கள் உயர்ந்த தொகைகொடுக்கமுடியாததால் பெண்களுக்கு மாப்பிள்ளை கிடையாமல் அதிக வயதாகும்வரை விவாஹம் பண்ணுவிக்காமல் இருக்கிறார்கள்.

பொதுவாக பணமே விவாஹத்தை ஒழுங்கு பண்ணுவதாயிருக்கிறது. பேராசையுடையோரான பெற்றோர் பணத்தைப்பற்றியே யன்றி வேறொன்றைப்பற்றியுங் கவலைபற்றோராய் இருக்கின்றனர். மாப்பிள்ளைகளுக்கும் பெண்ணுக்கும் உண்மையான பாசம் அற்றுப்போகின்றது பணத்தையே நாடும் விஷயத்தில் குணம் அழகு கல்வி இவைகளைக் கவனிக்கமுடியாது. ஆராய்ந்து பார்த்தால் பையன் பணத்தைத்தான் மணக்கிறானேயன்றி பெண்ணையல்ல. மாப்பிள்ளை கிரயத்துக்குக்கொள்ளப்பட்டவனாதலால் தனது மனைவியிடத்தும் மரியாதையை இழக்கவேண்டியதிருக்கிறது.

பணத்தால் சந்தோஷத்தை வாங்க முடியாது. இருவரும் ஒரு மித்திராவிடில் இல்லத்தில் இன்பம் இருப்பதரிது. ஆனால் ஒரு மனமுடைய இருவர் ஒருகாசுமிலாராயினும் வாணாளைச் சந்தோஷமாய்க் கழிப்பர். பெண்மக்களைப்பெற்றோன் சொத்துக்களை விற்று, ரொக்கத்தைக்கொடுத்துச் சில காலத்துக்குள் தரித்திரனாகிறான். இரக்கமற்ற மருமகனும் மாமனை மதிக்காது இகழுகிறான்.

இவ்வழக்கம் பெரும்பாலும் கற்றோரான கிறிஸ்தவ நாடார்களிடத்தில் அதிகமாய் இருக்கிறது. இவ்வழக்கத்தினின்று விடுதலைபாக ஏதேனும் வழியில்லையா? இதை வாசிப்போர் யாரேனும் நம்மனோருக்கு இவ்விஷயத்தைப்பற்றி அதிகமாக விளக்கிக்காட்ட முடியுமா? இத்தகைய முயற்சி நமக்கும் நமது பின்னடியாருக்கும் பெரும் பயனைப்பிறப்பிப்பதாய் இருக்காதா?

"குணசாலியான ஸ்திரீயைக் கண்டுபிடிப்பவன் யார்? அவளது விலைமுத்துக்களைப் பார்க்கிலும் விலையேறப் பெற்றது."—நீதிமொழிகள்.

ஆ. அருள்தங்கையா நாடார்
ஏ. எஸ். எம். ஜோஸ் நாடார், பசுமலை.

## ஸ்ரீகிருஷ்ணலீலை.

(விரமாமுனி எழுதுகிறார்)

கோபிகாஸ்திரீகளோ வெனில் ஸ்ரீபகவானுடைய முரளிகானமதுரஸ்வரங்கள் செவிகளில் நுழையும்போது அவற்றுடன் அதிக துரிதமாய்க் கரும்புவில்லை வளைத்து மன்மதன் தொடுத்து விடுகின்ற புஷ்பபாணங்களும் அந்த ஸ்திரீகளினுடைய மார்பில் நுழைந்தன. அதனால் அந்த ஸ்வரங்களைக் கேட்டமாத்திரத்தில் தங்கள் சரீர ஸ்மரணங்களை மறந்து,கிருஹ கிருத்தியங்களை யெல்லாம் எவையெவை எப்படி யெப்படியிருந்தனவோ அவைகளை அப்படியப்படியே விட்டவர்களாய் கிருஷ்ணனிடத்தில் வைத்தமனதுடையவர்களாய் ஒருவர்க் கொருவர் சொல்லாமல் அவரவர்கள் யதேச்சாவிகாரிகளாய் பிராதாக்கள் பத்தாக்கள் மைத்துனர்கள் முதலிய பந்து ஜனங்களால் தகையப்பட்ட போதிலும் லேசமாத்திரமும் அவர்கள் ஆக்ஞைக் கஞ்சாமல் வேலைகுறைவையும் யோசியாமல் நிர்மதிதாரணராய்ச் சர்வசங்க பரித்தியாகிகளைப்போல் வெளிப் புறப்பட்டு அந்தகானங் கேட்குமார்க்கமாயும் மந்தமாயும் பூரித்த ஸ்தனங்கள் குலுங்கவும் கொடிபோன்ற இடைதுவளவும் கூந்தல் சோரவும் மேகலைதாழவும் கோவிந்த சந்தரி ஜனுர்த்த குதூகலமுடையவர்களாய் யமுனாநதி சமீபத்தில் வந்துசேர்ந்து சந்திர கிரணங்களைக்குவித்ததொத்திருக்கின்ற வெண்மணற் குன்றின்மேல் அன்னங்கள் கும்புகும்பாய் வந்துதங்கியதற்கொப்பாகவும்அவ்விடத்திருக்கின்றசோலையின் விருக்ஷங்களின்கீழ் வரிசைவரிசையாய் கொடிகளிருப்பதற் கொப்பாகவும் நின்றார்கள்.

அந்த கோகுலத்தில் இன்னுஞ் சில கிரகஸ்தர்களாகிய பணக்காரன் வீட்டு ஸ்திரீகளில் சிலர் தங்கள் கிரகஸ்தர்களுடைய ஆக்கினையினால் கிரகத்தில் நிலவறைகளுக்குள் இருக்கின்றவர்களும் அந்தப்புரத்திலிருக்கின்றவர்களும்வெளிபேற முடியாதவர்களாய் கிருஷ்ணபகவானை நினைத்துமோகித்து தங்கள் மனோவீதியில் புருஷவுத்தமனாகிய மாதவப்பிரானை தங்களன்புக்குரிய ஜாரபுருஷனாகப் பாவித்து அதனாலுண்டாகிய விரகவேதனைக்கினிக்குச் சகிக்கமாட்டாமல் தங்கள் இருதயங்களில் சர்வஞ்ஞன் மோகனரான கிருஷ்ணனுடைய உருவத்தை நினைத்து ஆலிங்கனம் பண்ணுபவர்களாய் தியானத்துடன் மானசீகமாய் அனுபவித்து மனோபல மடைந்து பிரகிருதி பாசபந்த நிர்மித ஜம்பாப புண்யங்கள் நசிக்கத் தட்சணமே தேகங்களைவிட்டு சர்வேந்திரிய நிக்ரக பரமயோகீந்திரர்களும் அடைவதற்கரிய முத்திப்ரதமான பரந்தாமமாகிய பரமபதானந்த வைபவாதிசயங்களை யடைந்தார்கள்

இந்த யிடத்தில் மேற்சொல்லிய ஸ்திரீ ஜனங்கள்கிருஷ்ணபகவானை தங்களன்புக்குரியஇனியபோககசுக்திற்குத்தகுந்த ஜாரபுருஷனென்று நினைத்தார்களேயல்லாது அளவிறந்தநித்யகல்யாண குணங்களையுடைய சர்வசாக்ஷி பூதபரமாத்மாவாகியபரப்பிரம்மமென்று நினைக்க வில்லையே. அப்படியிருக்க அந்த ஸ்திரீஜனங்கள் சர்வபாவவிமோசனர்களாய் சர்வ விகாரால்பதங்களுக்குரிய பாஞ்சபூதிகான இச்சரீர ஜன்ம தோஷங்களினின்றும் நீக்கி நிர்மலாங்கக்கரண பரிசுத்த இருதயானுபவ மோட்ச சாம்பிராச்சியத்தை எவ்விதமாக அடைந்தார்கள் என்ற சங்கை யுண்டாகின்றன. சங்கை நிவர்த்தியாவது.

(இன்னும் வரும்)

## தேயிலையும், காப்பியும் தேவையில்லை.

(பங்களூர், "தமிழ்நாவலன்" ஸ்ரீமான் எஸ். கே. கோவிந்தசாமி பிள்ளை எழுதுகிறார்)

என்னுட்டவரும் கன்னூடு டெலவப் புகழும் புண்ணிய நாடாகிய இப்பாரத தேச மெங்கும 'நவீன நாகரீகம்' உதயமாகிவிட்டது: நமது பண்டைக்கால வழக்க ஒழுக்கங்களெல்லாம் சீர்குலைந்துவிட்டது.

அந்தோ! அந்தோ!! பரிதாபம்! பரிதாபம்!! இது "பழயன கழிதலும் புதியன புகுதலும்............" என்னும் முதுமொழிக்கிணங்க நம்முன்னோர்கள். அநுஷ்டித்துவந்தபுராதனகொள்கையை கைவிட்டு 'நவீன' நாகரீகமடைந்து விட்டோமெனக்கொண்டாடப்படும்இக்காலத்தில். இந்தியாவல்லாதஅன்னியநாட்டினர் உபயோகப்படுத்திவந்த "தேயிலையும்-காப்பியும்" முக்கிய உணவாகக்கொள்ளப்படுகின்றன- இங்ஙனம் 'துயில்' விட்டெழுந்தவுடன் ஒவ்வொரு கிரஹத்திலும் ஆடவரும் பெண்டிரும மக்களும் முக்கிய வேலையாகக் கவனித்து வருகிறது 'காப்பி' சாப்பிடுவதற்கான ஏற்பாடுகளே! அதன் பின்னர் தான் மற்ற வேலைகளைக்கவனித்து வருகிறார்கள். இதை யாம் எங்கெங்கும் கண்கூடாய் கண்ட விஷயம்.

நம மித்திய நாட்டின் கண் "காப்பி கிளப்பு"கள் தெருக்கள்தோறும் நாடிக்கொரு கடையாக ஏராளமாய் ஏற்பட்டுவிட்டது. இவைகளை பார்ப்பவர்கள்கண்கள் கவர்ந்து அவர்கள் மனதைக்கலக்கி தன்வயப்படுத்த பணத்தைப் பறிப்பதற்காக விநோத விநோதமான வர்ணங்களினால் இவ்விடத்தில் செய்யில் செய்த பக்ஷணங்களும் காபியும் டீயும் கிடைக்கும் வாருங்கள் வாருங்கள்! என்று சொல்லி அழைப்பதுபோல் 'போர்டு பலகைகள் தொங்கவிடப்பட்டிருக்கின்றன'

தவிர இருப்புப் பாதைகளில் பிரயாணஞ்செய்யும் பிரயாணிகள் பசியாற்றிக் கொள்வதற்கு ஒவ்வொரு ஸ்டேஷன்களிலும் காப்பி கிளப்புகள் உண்டு. தவிரவும் பிளாட்பாரத்தில் பால் காப்பி. பால்காப்பி!! சூடான தேத்தண்ணீர், சூடான தேத்தண்ணீர்!! என்று கூவும் ஓசையானது இருசெவிகளும செவிடுபடும்படியாக யிருக்கின்றது.

இவைதத்தவிர்த்து கடைவீதிக்குச் சென்றாலோ லிப்டன்'ஸ் டீயைக்குடித்து ஆனந்தமடையுங்கள்என்றுவரைந்துள்ள போர்டுகள்(விளம்பரப் பலகைகள்) ஒவ்வொரு கடைகளிலும் காற்றினாலலைந்து மொத்துண்டு அசைந்தாடுகின்றன, இன்னும கடையின முகிற்சென்றால் லிப்டன், காப்டன் ரிப்பன்ஸ், லாட்டான்ஸ் ஆரஞ்சிபிக்கோ ரோஸ், ஸ்டேருண்டை காப்பி, சாதாக்காப்பி பாரிஸ்மெண்ட் காப்பி இதை வாங்குங்கள் இதைவிட மேலானது இதை வாங்குங்கள் இதைவிட மிக்க உயர்வான சரக்கு இதை தானே வாங்குங்கள் என்று வியாபாரிகள் ஜனங்களின் மனதைக் கலக்கி நாசபடுக்கிறார்கள். இதுமிற்க தெருக்களிற் சென்றால் சுண்ணாம்பு அடித்த சுவர்களிலெல்லாம் சூடானதேத்தண்ணீர், சோர்வை யகற்றுகிறது, மனதிற்குத் தகுதியான உற்சாகத்தைத் தருகிறது. காலணாவிற்கு இரண்டு கோப்பைகள் தயாரிக்கலாம். பொட்டணம் 1-க்கு காலணா என்று ஜனங்களைத் தட்டி எழுப்புவது போல் நம்மித்திய நாட்டின் கண்ணுள்ள ஏழை ஜனங்கள் முதல்யாவரும் வாங்கி உபயோகிக்கும் பொருட்டு இப்படியும் ஒரு வியாபாரத் தந்திரம் சுவர்களிலெல்லாம் சிரிக்கின்றன.

அந்தோ! நமது நாட்டில் ஒவ்வொரு குடும்பங்களில் நடக்கும் சர்வ விசேஷத்தினங்கட்கும் காப்பியும், டீயும் 'பானம்' பண்ணுவது பழக்கமாய்விட்டன. தற்காலம் நமது இந்தியா தேசமுழுதும் காப்பியாகிய காலமேகமும்தேயிலையாகிய மாலமேகமும்சூழ்ந்துவிட்டதே ஐயோ! இக்கெட்ட 'மேகம்'என்றுதொலையுமோ நம்மிந்தியமக்கள்'வறுமை' யடையாமல்ள ப்பே நன்மை'யடைவார்களோ? தவிரகாப்பிக்கிளப்புகளில் பேய்க்காய்ப்பொடியை கலந்துவிடுகிறார்கள் என்றும், சிலர் போதை வஸ்துக்களைக்கலந்துவிடுகிறார்களென்றும், பலர் சொல்ல யாம் கேட்டுள்ளோம். இப்படிக்கெல்லாம் நடைபெறுவது உண்மையோ அல்லது ஜனங்களின் எண்ணமோ யாமறியோம்

பிராமணர்களே பெரும்பாலும் "காப்பி கிளப்பு"களை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இத்தொழில் 'பிரம்ம' குலத்துதித்தவர்கட்கு ஏற்ற தொழில் முறைதானா? இத்தொழிலில் அவர்கள் குலத்திற்குத் தகுந்த ஆசார ஒழுக்கங்களில்லை.

இவ்விடத்தில் "நான் மறையோதா அந்தணரென்போரனைவரும் பதரே" என்ற ஆன்றோர் உரையைக் கவனிக்க வேண்டும். இது நிற்க:—

(இன்னும் வரும்)

## புருஷனைப் புகழ்ந்து வாழ்.

பெண்களுக்கு புருஷனைத் தவிர வேறு தெய்வமில்லையென்றுபதிவிரதாதருமசாஸ்திரத்தில் சொல்லப்படுகிறது. பெண்கள் தங்கள் இல்லற தருமங்களைநடத்துவதில் புருஷனுடையமனோபீஷ்டப்படி நடத்தல்வேண்டும். கல்லானாலும் கணவன்—புல்லானாலும் புருஷன் என்ற பழமொழிப்படி புருஷன் எவ்வளவு கேவல நிலைமையிலுள்ளவனாயினும் பதிவிரதா ஸ்திரீகள் கணவனை கடவுளாக நினைந்தொழுகல் வேண்டும். கல்லெல்லாம் கடவுளாகும்போது கணவன் கடவுளாவதென்றால் இதில் என்ன சந்தேகமிருக்கிறது. கல்லினால் விக்கிரஹப் பிரதிஷ்டை செய்து அதை கடவுளாகப் பாவித்து நமது மனோசக்தியை நாம் பூரணமாக செலுத்தும்போது ஜீவசக்தி நிறைந்துள்ள கணவனைக் கடவுளாக பாவித்து அவனிடத்தில் பயபக்தி விசுவாசத்தை பெண்கள் செலுத்தும் விஷயத்தில் அவன் அவர்களுக்கு நிச்சயமாகவே கடவுளாகி அதனால் அக்குடும்பத்திற்கு அநேக சாதகங்களுண்டாகும். இவ்விதமின்றி புருஷனை பெண்கள் அவமதித்து எந்தநேரமும் சண்டை சச்சரவுகளுடனிருந்தால் குடும்பங்கள் பாதகங்களை அடையுமேயல்லாது சுகமாய் வாழமுடியாது. குடும்பத்தில் எப்போதும் போராட்டம் கூடாது. புருஷன் ஒருக்கால் கெட்டவழிகளில் நடந்தால் அவனுக்கு இதமாய் நல்வார்த்தைகளை நயந்து சொல்லி அவனை நல்லவழிகளில் நடக்கச்செய்ய வேண்டியதும் பெண்களின் கடமையாகும். அவ்விதமில்லாது அவன் கெட்ட வழிகளில் நடக்கிறான் என்று அவனை கோபிக்கவும் கண்டிக்கவும் அதனால் இல்லாகாரியங்களை சரியாய் நடத்தாமலிருக்கவும் பெண்களுக்கு அதிகாரமில்லை. புருஷனை வசியப்படுத்தக் கூடியவல்லமை பெண்களுக்கு இயற்கையாகவேயிருந்தும் அவர்கள் அவைகளை இது விஷயங்களில் உபயோகப்படுத்துகிறதில்லை இதனால் வினையும் தீங்குகளதிகம். புருஷன் ஒரு வார்த்தை சொன்னால் பெண்கள் பத்து வார்த்தைகள் சொல்லுவதாயிருக்கிறது. புருஷன் வார்த்தைகளுக்கு தாழ்ந்து போகிறது கிடையாது. புருஷன் மதியீனத்தால் கெட்டவழிகளில் நடந்தால் பெண்களும் புருஷனுடன்போட்டிபோட்டுக்கொண்டு வீம்புக்காக பெண்களும் கெட்ட வழிகளில் நடக்கிறதுண்டு. இதனால் குடும்பங்கள் கெட்டு அலைகின்றன. கெட்டாலும் மேன் மக்கள் மேன்மக்களே என்றபடி ஆண்மக்களானவர்கள் கெட்ட நடபடிக்கைகளில் சென்றாலும் பின் அவர்களுக்கு தானாகவே பக்குவந்த காலத்தில் அக்கெட்ட நடபடிக்கைகளிலிருந்து நிவர்த்தியாகி நல்லவழிக்குவந்து சிறப்புற்றோங்கியிருப்பார்கள் பெண்கள் கெட்டால் எப்போதும் கெட்டவர்களே. பின் கெட்டபேர் மறையாது நிலைத்து நிற்கும் வசைச்சொலாகும். இவ்விஷயங்களை பெண்கள் அறியாது புருஷனைவிட தங்களுக்கு அதிக சுதந்திரங்களிருப்பதாக நினைத்து புருஷனைப் புகழ்ந்து வாழாமல் புருஷனை பேவலம் செய்து அவனைக்குறித்து கண்ட இடங்களில் புகார்கள்சொல்லி அப்புகார்களை கேட்டவர்கள் அவைகளை புருஷனிடம்சொல்லி அதனால் புருஷனுக்கு மனதிற்கு பலபல வருத்தங்களும் விசாரங்களும் ஏற்பட்டு பெண்களை அடிக்கவும் சில சமயங்களில் அப்புறப் படுத்திவிடவும் ஏற்படுகிறது. ஆகையால் பேருந்தனைப் போற்றிவாழ் என்றபடி புருடனை புகழ்ந்து வாழும் மார்க்கத்தைப் பெண்கள் தேடுவார்களாக.

ஆஸ்ரம போதினி.

பரந்த நோக்கத்தையும், விரிந்த மனத்தையுங்கொள்ளுங்கள்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## 9-வது கான்பரன்ஸ்.

(ஸ்ரீமான் வ. பு. அ. சௌந்திரபாண்டிய நாடாரவர்கள். எம். எல். ஸி. யின் வருமாறு எழுதுகிறார்.)

வைகாசியில் நடைபெற்ற 8-வது கான்பரன்ஸின் இரண்டாம் நாள் பிற்பகல் நடவடிக்கைகள் முடிவடையுமுன் 9-வது கான்பரன்ஸை ஒருவரும் எவ்விடத்திற்காவது அழைக்க முன்வராததிலிருந்தே கான்பரன்ஸ் நடத்துவதில் இருக்கிற சிரமம் இன்னதென எல்லோரும் அறிந்துவிட்டார்களெனத் தெரிந்தோம். அதற்கிணங்க, அநேகவித பிரயத்தனங்கள் மகாநாடு கூட்ட அபிமானிகள் செய்தும் இதுவரை ஒருவித திட்டமான முடிவுக்கும் வரவில்லை.

இவ்வருஷ கான்பரன்ஸை பழையபடி டம்பாச் செலவின்றி நடத்தினாலன்றி முன்னேற்றத்தின் முதல்படியிலிருக்கிற நமது ஜன சமூகத்தின் தீவிரகதி தடைபட்டு தயங்கி ஸ்தம்பமடைந்து தெளியவேண்டியிருக்கும். இவ்வருஷம் கான்பரன்ஸ் நடைபெறாவிட்டால் அதனாலாய அடையவேண்டிய கஷ்டங்கள் அநேகமுள.

ஆகையால் நமது மஹாஜன சங்கத்தின் அருட்பெரு மீட்டிங்கீக்கிரம் நடைபெற நமது காரியதரிசிகள் முயற்சிக்குமாறு விரும்புகிறேன்.

## நாடார் மஹா ஜனங்களுக்கு தெரிவிப்பு.

நாளது ஜூலை௴ 21௳ வெளிவந்த நமது 'நாடார்குல மித்திரன்' பத்திரிகையில் "அறிவிப்பு" என்னும் தலைப்பின் கீழ் கனம் காரியதரிசி அவர்கள் கையொப்பமிட்டு எழுதியுள்ள விஷயத்தை படித்ததில் என்னை சென்ற 27-6-23 முதல் நாடார் மகாஜன சங்கம் கௌரவ பிரசாரத்திலிருந்து மறு உத்திரவு பிறப்பிக்கும்வரை சஸ்பெண்டு செய்யப்பட்டிருப்பதாய் தெரியலானேன்.

நான் நமதுஜன சமூகத்திற்கு செய்துவரும் ஊழியத்துடன் இதுகாறும்நாடார் மகாஜன சங்கத்திற்கு தலைக்கட்டுவரி அங்கத்தினர்சந்தா கல்கொடை முதலியன வசூலித்துவந்த வேலை தற்போது என்னைவிட்டு நீங்கியிருப்பது எனக்குமிகச் சந்தோஷமே. ஆனால் நமது நாடார் மகாஜன சங்கத்தின் முக்கிய நோக்கத்திற்கிணங்க நம்மவர்களுக்குள் கல்வி, ஒற்றுமை, ஒழுக்கம் முதலிய நற்காரியங்களை விருத்திச்செய்து கொண்டுவர ஊர்கள் தோறும் பிரசங்கத்தின் மூலமாய் எடுத்துரைப்பதுமல்லாமல் அக்காரியங்களை அப்போதே அனுஷ்டானத்திற்கு கொண்டுவர செய்துவைக்கும் ஊழியத்தை எப்போதும்போல் நமது ஜனசமூகத்திற்கு செய்துவர கடமைப் பட்டிருக்கிறேன் என்பதை இதன் மூலமாய் நமது மகாஜனங்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்ளுகிறேன். கே. எஸ். அருணகிரி நாடார் 'பாண்டியகுல தீபம்' பத்திராதிபர்.

## நாடார் மகாஜன சங்கம் மதுரை.

## அழைப்பு நோட்டீஸ்.

ஐயா, நமது நாடார் மஹாஜன சங்கம் 9-வது கான்பரன்ஸை மதுரையில் கூட்டுவதற்கு உபசரணைக்கமிட்டி நியமனஞ் செய்யவும் கௌரவ பிரஸிடெண்டு தெரிந்தெடுக்கவும் 1—8—23 புதன்கிழமை மாலை 4-30-மணிக்கு மதுரை கீழமாசிவீதி மேலப்பேட்டை ஹாலில் ஒரு மீட்டிங் நடப்பதால் அபிமானிகள் தவறாது விஜயஞ் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

ம. வே. பழனிச்சாமி நாடார்,
வா. அ. புன்னையப்ப நாடார்,
மதுரை 26-7-23. } காரியதரிசிகள்

## உபாத்தியாயர் தேவை.

எலிமெண்டரி ஹையர்கிரேட் டிரேயினிங்சர்ட்டிபிக்கேட் உடைய ஓர் உபாத்தியாயர் தேவை. வயது, நன்னடத்தை சர்டிபிக்கேட், டிரேயினிங்சர்ட்டிபிக்கேட்டின் நகல், உபாத்திமை வேலைபார்த்தயிடம் முதலிய விபரங்களை தெரிவிக்கவேண்டும். சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூ 20 முதல் ஆரம்பிக்கப்படும். மனுதார் நாளது ஆகஸ்ட் மாதம் 20-ந் தேதிக்குள் விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும். விலாசர்— பத்திராதிபர், 'நாடார்குல மித்திரன்' அருப்புக்கோட்டை.
(மனுதார் நாடாராயிருத்தல்வேண்டும்.)

## செய்தித் திரட்டு.

### நாடார் லைப்ரேரி & ரீடிங்ரூம் தெற்குவாசல், மதுரை

21-7-23 சனிக்கிழமை மாலை 4½-மணிக்கு நாடார் வித்தியாசாலைக் கட்டிடத்தில் 2-வது மீட்டிங் ஸ்ரீமான் எ. பொன்னையா நாடார் பி. ஏ. அவர்களின் அக்கிராசனத்தின்கீழ்கூடிற்று. ஸ்ரீமான் தா. சாமுவேல் யோசேப்பு நாடாரவர்களால்முதல்கூட்ட விஷயம் வாசிக்கப்பட்டு எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது. ஸ்ரீமான் க. ச. மாரியப்பநாடார் ஐக்கியமென்னும் விஷயத்தைக் குறித்தும் ஸ்ரீமான் தா. சாமுவேல் யோசேப்புநாடார் லைப்ரெரி அன் ரீடிங்ரூம் இவ்விஷயங்களைக் குறித்தும் ஸ்ரீமான் கா இராமலிங்க நாடார் நம்குலப் பத்திரிக்கைகளை குறித்தும் உபந்நியாசஞ் செய்தார்கள். ஸ்ரீமான் ச. சி. சப்பாணி நாடார் அவர்கள் வித்தியாபிவிர்த்தி சங்கத்தாரை லைப்ரெரிக்காக பள்ளிக்கூடத்தில் இடம் கொடுக்கும் படியாக கேட்டுக்கொண்டார். பின்பு ஸ்ரீமான் பூ. சி. சின்னையா நாடார் அவர்கள் ரீடிங்ரூமுக்காக "நாடார்குல மித்திரன்" 'க்ஷத்திரிய மித்திரன்' முதலிய நம்குலப் பத்திரிக்கைகளையும், சுதேசமித்திரன், திராவிடன், ஆனந்தபோதினி முதலிய பத்திரிக்கைகளையும் இன்னும் புராண புத்தகங்களையும் கதைப்புத்தகங்களையும் வரவழைக்கவேண்டுமென்றும் வற்புறுத்திப்பேசினார். ஸ்ரீமான் கா. ஆண்டியப்ப நாடார் அவர்கள் நன்கொடை கொடுக்கும்படி ஜனங்களைக் கேட்கப் பத்திரி கையொப்பமிடும்படி செய்து கொண்டார்.

அந்த ஐரோப்பியனே அதற்குச் சமீபத்திலிருக்கும் 'கொந்தக் கடலை' என்ற ஆஸ்பத்திரிக்குத் தனது மோட்டார்வண்டியிலேயே கொண்டுபோனான். ஆஸ்பத்திரியில் சற்று நேரத்துக்குள் குழந்தை மரணமாகிவிட்டது குழந்தையின் பெற்றோர்களின் பரிதாபம் சொல்லி எடுத்துரைக்க இயலாதுவென்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

• • •

### மரணமானர்.

தற்சமயம் ஸ்காட்லண்டு தேசத்தில் வசித்துவரும் சென்னைபட்டணத்தில் கிருஸ்டின் காலேஜை உண்டாக்கினவரான ரெவரெண்ட் டாக்டர் வில்லியம் மில்லர் நாளது ஜூலை மாதம் 15-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை இவ்வுலக வாழ்க்கை நீத்தார் என்று தெரியவருகிறது.

• • •

### காலஞ் சென்றார்.

நமது குலாபிமானியும் பேரையூர் போர்டு பெண்பாடசாலைத்தலைமை உபாத்தியாயினியுமான கனம் சாயம்மாள் அருமைநாயகரும் டை. ரூர் போர்டு ஸ்கூல் 2-வது உதவி உபாத்தியாயருமான கனம் பால் சாமுவேல் நாடாரவர்கள் தனது இளவயதில் இம்மண்ணுலகத்தை விட்டு விண்ணுலகம் சென்றாரென்ற செய்தி எட்டி பெரிதும் வருந்துகின்றோம். நமது அனுதாபத்தை அன்னவருடைய குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். எல்லாம் வல்ல இறைவன் அன்னவர்களுடைய குடும்பத்தாருக்கு நல்ல ஆறுதல் அளிப்பாராக! என்று இரங்கூனிலிருந்து ஓர் அனுதாபி எழுதுகிறார்.


## எறல் 5வது மகாநாடு.



ருத்ரோத்காரி௵ ஆடி௴ 28௳
(12-8-23) நடைபெறும்.

மகாநாட்டிற்கு தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

பலதலைவர்கள்விஜயமாவதாயறிகிறோம்,

மித்திரன் அதிபர் தம் சகாக்களுடன் விஜயஞ் செய்வார்கள்.

பலதுறைகளிலும்பலமான ஏற்பாடுகள் நடந்துவருவதால்

நாடார் மகாஜனங்கள் தவறாமல் விஜயஞ் செய்து மகாநாட்டை சிறப்பிப்பார்களென எதிர்பார்க்கப் படுகிறது


கூட்டத்தின் முடிவுரையாக அக்கிராசனாதிபதி அவர்களால் இவ்விஷயத்தைப் பற்றி அநேகவிஷயங்களை உதாரணத்துடன் எடுத்துக்காட்டி ராஜவாழ்த்துடன் கூட்டம் இனிது முடிவுபெற்றது என்று ஸ்ரீமான்களான ச. சி. சப்பாணிநாடார் தா. சாமுவேல் யோசேப்பு நாடார் எழுதுகிறார்கள்.

• • •

### விநோதவிகடனின் ஆரம்ப வருடப்பூர்த்தி விழா

விநோதவிகடன் பத்திரிகையின் ஆரம்ப வருடப்பூர்த்தி விழா கொண்டாட ராவ்பகதூர் ஓ. தணிகாசலம்செட்டியார் பி. ஏ. பி. எல்; எம். எல் ஸி. அட்டர்னி அட்லா அவர்களை தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு வைபவோற்சவம் சிறப்பாக நடைபெற்றது என்று அப் பத்திரிக்கையின் மானேஜர் அறிவிக்கின்றார்.

• • •

### அபாயமான மரணம்.

கல்கடுவைஎன்ற தோட்டத்துக்கூலிக்காரனொருவன் தானும் தன்மனையாளும் 6-வயதுள்ள தனது பெண் குழந்தையுமாக அருகாமையில் இருக்கும் நாபடை என்ற கடை வீதியில் சாமான்வாங்கப் போகும் சமயத்தல் ஒரு ஐரோப்பியனுடைய மோட்டார் வண்டி வரவும் தாய் ஒரு பக்கமாயும் தகப்பன் ஒரு புறமாகவும பிரியவும் இடையில் குழந்தை அகப்பட்டது வண்டி ஓட்டுகிறவன் ஒதுக்கி ஓட்டியும் வண்டியை நிறபாட்டியும் அதற்குள் குழந்தைமோட்டாரில்அடிபட்டதுகுழந்தையின்தேகம்காயப்பட்டது

## பின்வந்த மதுரைச் செய்தி,

(நமது நிருபரிட மிருந்து)

### கான்பரன்ஸ்.

நமது நாடார் மகாஜன சங்கம் 9-வது கான்பரன்ஸை மதுரையில் நடத்த பிரபல கனவான்கள்முன்வந்திருக்கிறார்கள் அன்றியும் 9-வது கான்பரன்ஸிற்கு உபசாரணை கமிட்டியும் கௌரவ அக்கிராசனரும் தெரிந்தெடுக்கவும் கான்பரென்ஸ் நாட்கள் குறிப்பிடவும் 1-8-23௳ மேலப்பேட்டை ஹாலில் ஓர் மீட்டிங் நடைபெறும் அவ்வமயம் பல கனவான்கள் விஜயஞ் செய்வார்களெனத்தெரிகிறது. இதுவிஷயமாய் பாளையங்கோட்டை வாசிகள் நடந்துகொண்டது வருந்தத்தக்கது

• • •

### விலகி விட்டார்.

சென்னை சட்டசபைக்கு அபேக்ஷகராய் நின்ற ஸ்ரீமான் மொ. சி ஆ. சிதம்பர நாடார் தமது குடும்பத்தாரின் மனவருத்தத்திற்காற்றாது அபேக்ஷகர் பதவியினின்று விலகிவிட்டதாக இன்று ஊழியப் பிரசார சபை பிரஸிடெண்ட் அவர்களை கண்டு பேசியபோது தெரிவித்தார். சென்ற வருடத்திலும் நின்று விலகிய நம் அபேக்ஷகர் இவ்வருடத்திலும் இவ்வாறு நடந்துகொண்டது வருந்தத்தக்கது என்னே இவர் தம் ஊக்கம்!

## அபிமானம் வேண்டும்! அன்பு வேண்டும்!!

## நமது மகாஜன சங்க காரியதரிசிகள் கவனிக்கவேண்டும்!!!

சென்ற வைகாசி௴ 29௳ வெளியான நமதுகுல மித்திரனில் பிரசாரகர்கள் தேவை என்னும் தலைப்பின்கீழ் சில நிபந்தனைகள்காட்டி நமது காரியதரிசிகள் பிரசாரகர்களை அழைக்கிறார்கள். அதைப் பார்த்தால் குலாபிமானம்ததும்பிய பிரசாரகர்கள் தேவையா? அல்லது இருபது ரூபாய்க்குமேல் இருபத்தைந்து ரூபாய் சம்பளத்துக்குத் தகுந்தாற்போல் பிரசாரம் செய்யக்கூடிய பிரசாரகர்கள் தேவையா? என்பது விளங்கவில்லை.

குலாபிமானம் ததும்பிய ஒருவர் காரியதரிசிகள் விடுத்திருக்கும் நிபந்தனைகளைப்பூர்த்திசெய்து பிரசாரகராய்ப்பதிவு செய்துகொள்வது மிகவும்துர்லபம் குலாபிமானம் ததும்பிய ஒருவர் நற்சாட்சிபத்திரத்துடனும் யோக்கியப்பொறுப்புடனும் தன்னை பிரசாரகராய் பாவித்து இருபது முதல் இருபத்தைந்துவரை சம்பளம் வாங்குவதைக்காட்டிலும் தங்கள் மட்டில் எவ்வகையிலும் ஜாதிக்கு உழைக்க தயாராக யிருப்பார்களேதவிர குலாபிமானத்தை அளவுபடுத்தும்அடிமைசெயல்களுக்குக் கட்டுப்பட்டு நாளடைவில் குலாபிமானத்தை இழந்துவிட ஒருநாளும் சம்மதிக்கமாட்டார்கள்.

நமக்கு இப்போது குலாபிமானம் ததும்பிய பிரசாரகர்கள் தேவையே தவிர குறிப்பிட்ட சம்பளத்துக்கு தக்கபடியான பிரசாரகர்கள் தேவையில்லையென்பது வெளிப்படை, ஆகவே பிரசாரகர்களைத் தேடுவதில் வேறு முறை கையாளுவதே சிறந்ததாகும்.

நம் ஜனசமூகத்தில் எண்ணிறந்த குலாபிமானிகளிருந்தும் நமது சங்கத்தை நடத்த வல்ல திறமையும் பொறுப்புமுள்ளவர்கள் இன்னின்னார் தானென்று தெரிந்து நியமனம் செய்து வருகிறோமென்பது எல்லோரும் அறிந்த விஷயம். இப்படி பொறுப்பேற்ற பெரும் பதவிகளுக்கு வேண்டிய தலைவர்களை நியமனஞ் செய்யும் நாம் நமது ஜனசமூகத்துக்குத் தக்க பிரசாரகர்களை தெரிந்தெடுப்பது பெரிதல்ல. இதுவரை நம்நாடார் மகாஜன சங்கத்துடனாவது அதை நடத்தும் தலைவர்களுடனாவது தற்கால பிரசாரகர்களுடனாவது கிளைச்சங்கத்துடனாவது உறவாடியிராத ஒருவர் நமதுசங்கத்தின் பிரசாரகர் வேலையை ஏற்று எதுவும் செய்துவிடமுடியாது: எனவே நம் ஜனசமூகத்துக்குத்தகுந்த பிரசாரகர்கள் நம் தலைவர்களுக்கோ அன்றி தற்காலத்து நமது பிரசாரகநண்பர்களுக்கோ அன்றி கிளைச் சங்கங்களுக்கோ நன்றுதெரியக்கூடியவையாகும். அப்படிப்பட்டவர்களை நம் ஜனசமூகத்தின்பொருட்டு பிரசாரகராக நமது சங்கம் அழைக்கலாம். சிலர் யாதொரு பிரதி உபகாரமின்றி உழைக்கலாம். சிலர் சிறு உபகாரம்பெற்று உழைக்கலாம் இவர்களிடத்தில் நம் ஜன சமூகம் என்றும் கடமைப்பட்டுள்ளது.

சிலர் குலாபிமானம் ததும்பியவராகவும் பிரசாரத்திற்கு பொருத்த முள்ளவராகவிருக்கலாம். ஆனால் அவரது குடும்ப வாழ்வு அவரை பின்னிழுக்கக்கூடியதாகயிருக்கும் அப்படிப்பட்டவர்களுக்கு சங்கத்தினின்று போதிய உதவிசெய்யின் அக்குறையினின்று விடுபட்டு ஜனசமூகத்தின் பொருட்டு டம்பமில்லாத ஆடம்பரமில்லாத வாழ்க்கையுடன் நம் ஜன சமூகத்திற்கு பெரும்வேலைகள் செய்யமுடியும் இவர்களுக்கு செய்யும் உதவியானது கூலிக்குக்கொடுப்பதாக கருதுவதும் அடிமைகள் என்பதுபோல் பாவிப்பதுவும் பெருந் தவறாகும். குல நன்மைக்கு பாடுபடும் ஒருவர் குடும்பத்தை காப்பாற்றும் பொறுப்பை மகாஜன சங்கம் ஏற்றுக்கொண்டிருப்பதாக கருதி வேலைநடத்தவேண்டும். இவ்விதம் செய்யப்படுமானல் பிரசாரகர்களுக்கு உற்சாகமும் அபிமானமும் மேலுமேலும் வேரூன்றி ஏராளமான பிரசாரகர்கள் தோன்றி பெரும் வேலைகள் நடக்க ஏதுவாகயிருக்குமென்பதை மனப்பூர்வமாய் தெரிவித்துக்கொள்ளுகிறோம். நமது காரியதரிசிகள் கவனிக்குமாறு பன்முறை வேண்டுகிறோம். கடவுள் அருள் புரிவாராக!

குமார்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

# நாடார்குலமித்திரன்.

ருத்ரோத்காரி வருஷம் ஆடி மீ 17௳

## நமது நிலைமை.

வானளந்து சூழ்ந்த வையகமெங்கும் சுதந்திரமடைய வேண்டி ஒவ்வொரு மனிதனும் அபேட்சை யடையாதே தன்னது பிறப்புரிமையென்பதை முன்னிட்டு உயிரையுங் கூடப் பொருட்டாவெண்ணுமல் தியாகஞ்செய்ய முன்வந்து கொண்டிருக்கிறான். அவ்வளவு தாகமேலிட்டிருக்கும் தற்கால உலகத்தில் நாடார் சமூகமாகிய நமது நிலைமையைக் கவனித்தால் நித்திரையிலிருந்து சற்றேனுந் தெளியவில்லையென்பது போல் காணப்படுகிறது.

தற்காலம் நமது நிலைமையின் பரிபாகத்தைச் செவ்வனேயுணர்ந்த நாடார் மகாஜன சங்கத் தலைவர்கள் நமது கான்பரன்ஸை இவ்வாண்டில் திருநெல்வேலியில் வைத்து நடத்தவேணுமென்று அந்த ஜில்லா ஜனத் தலைவர்களிடம் போய் வேண்டிய மட்டும் பிரயாசைப் பட்டிருக்கிறார்கள். பட்டுமென்ன? அவர்கள் முயற்சி பலிதமடையாமற் செய்து விட்டது. கடல் பிரதேசத்தில் வசிக்கும் நாடார் மகாஜனங்கள் மனமுவந்து இவ்வருடம் திருநெல்வேலியையே நோக்கி நின்றது மற்றும் சகல ஜனங்களும் அதே கவனமாகத்தானிருந்தனர். மகாஜனங்களின் நோக்கத்தை நிறைவேற்றி வைப்பதவசியமென்றும், திருநெல்வேலி ஜில்லாவின் குறைகள் அநேகம் கவனிக்கத் தக்கதாகயிருக்கிறதென்றும், ஆகையால் இம்முறை அங்ஙனமே கூடுவது அவசியமென்பதை நாமும் பன்முறை வற்புறுத்தி வந்திருக்கின்றோம்.

என்ன சொன்னாலும் நாங்கள் சொன்னதைத்தான் செய்வோமென்ற நிலைமையில் அந்த ஜில்லா நாடார் சமூகத் தலைவர்கள் பின்வாங்கி விட்டதைப்பற்றி நாடார் மகாஜனங்கள் மகா துக்கப்படுகின்றனர். மேலும் நாடார் மகாஜனங்கள் பேரில் மிகவும் அபிமான புருஷர்கள் என்று மதிக்கத்தக்க மகா மேதாவிகளுங்கூட, மாபெருங் காரியத்தை யாவரால் முடிக்கத்தகுமென்று பயந்துபோனதையும் கண்டு, நாடார் மகாஜனங்கள் ஆச்சரியம் அடைவார்கள். முயற்சி செய்த அபிமானிகளும் பணத்தைச் செலவு செய்துவிட்டு இலவுகாத்த கிளிபோலானார்களென்றே சொல்லலாம். இதையெல்லாம் நினைக்க மகா விசனத்துக்கிடமுண்டாகின்றது,

ஆயினும் நான்கு வருடமாகநின்றுபோயிருந்த நமது சங்கத்திற்கு புத்துயிர்கொடுத்து எத்திசையிலும் பேர்விளங்கும்படி மூன்றாவது, நான்காவது கான்பரன்ஸை நமது பூர்வீக நகரமாகிய மதுரைமாநகரில் நடத்தி வைத்த மதுரை நாடார் மகாஜனங்கள் 9-வது கான்பரன்ஸை மதுரையில் வைத்து நடத்த மார்தட்டிமுன் வந்திருப்பதாகக் கேள்விப்பட்டுமகிழ்வடைகின்றோம். உபசரணைக் கமிட்டியும், கௌரவச் சேர்மனும் தெரிந்தெடுப்பதற்காக நாளது ஆகஸ்ட் மீ 1௳ மதுரையில் ஒரு கூட்டம் கூடப்போவதாக சங்கக் காரியதரிசிகளிடமிருந்து அழைப்புப் பத்திரிக்கைகளும் வெளியிடப்பட்டிருக்கிறது.

திருநெல்வேலி ஜில்லா நாடார் சமூகத் தலைவர்கள் பயந்தொழிந்தாலும், இவ்வருடம் கான்பரன்ஸ் நடக்குமோவென்ற சந்தேகத்துடன் விசனப்பட்டிருக்கும் இந்நேரத்தில் மதுரை நாடார் மகாஜனங்கள் ஊக்கத்துடன் முன் வந்திருப்பதை மிகவும் பாராட்டுகின்றோம். அவர்கள் அக்காரியத்தை யாதொரு விக்கினமின்றி நடாத்தி பூரண வெற்றியடைவார்களென்றே நம்புகின்றோம்.

இது நிற்க, சென்னைச்சட்ட நிரூபண சபைக் கோயிலில் வரப்போகிற 1924௵ ஆரம்பத்தில் நடக்கும் கும்பாபிஷேகத்தில் குந்தப்போவதற்காக தேசஜனங்கள் இப்போதே எவ்வளவு தீவிரமுயற்சியெடுத்து வருகிறார்களென்பதை செவ்வனே உணர்ந்தும், நாடார்களில் அபேக்ஷகர்கள் யார், யார் என்று ஒன்றுமே தெரியவராமலிருக்கிறது. சிவகாசி ஸ்ரீமான் மொ. சி. ஆ. சிதம்பர நாடார் பீ. ஏ. பீ. எல். அவர்கள் மட்டும் மதுரை ஜில்லாத் தொகுதிக்கு ஒரு அபேக்ஷகராக நிற்பதாக ஷை யார் கையொப்பமிட்ட துண்டு விளம்பரப் பத்திரிகை ஒன்று நமது பார்வைக்குக் கிட்டியதோடு மதுரை ஊழியப்பிரசார சபையாரும் நமக்கொரு விளம்பரம் அனுப்பியிருந்தார்கள்; ஆனால் இப்போது அவர் தமது குடும்ப அலுவல்களை முன்னிட்டு தாம் விலகிக்கொண்டதாக மதுரை நமது சொந்த நிருபர் அறிவித்திருக்கிறார். ஸ்ரீமான் மொ. சி. ஆ. சி. அவர்கள் இது விஷயமாய் இதுவரையும் நமக்கு நேரே ஒரு தகவலுங் கொடாதிருப்பதால் மதுரை ஊழியப்பிரசாரசபையார் முதலாவது பிரசுரம் பண்ணியது பிசகாயிருக்கலாமோ வென்றும் பத்திரிகைகளில் அபேக்ஷகரின் பெயர் வெளிவந்தவுடனே ஸ்ரீமான் அவர்கள் ஆக்ஷேபிக்கவுமில்லை. ஆகையால், இவர் அபேக்ஷகராக முன் வந்து பின்னின்றதும் உண்மைதானென நம்பவேண்டியதிருக்கிறது. இவர் முதலாவது எலெக்ஷன் காலத்தில் தமது வாச ஜில்லாவாகிய இராமநாதபுரம் ஜில்லாவிற்கு ஒரு அபேக்ஷகராய் நின்று மறுபடி விலகிக்கொண்டார். இப்போது அடுத்த மதுரை ஜில்லாவுக்குப் போய் திரும்பிவிட்டார். இது விபரம் முழுவதும் மறுமுறை விஸ்தாரமாய் எழுதுவோம்.

நாடார்களில் மற்றும் அபேக்ஷகர்கள் கான்பரன்ஸ் மூலம் தீர்மானிக்கப்படும்போல் தெரிகின்றது. ஆகவே கான்பரன்ஸை காலதாமதப் படுத்தாமல் கூட்டிவைக்கும் வேலையை துரிதமாய்ச் செய்யவேண்டியதிருக்கிறது. இதற்குமுன் மதுரையில் நடந்த கான்பரன்ஸ்களுக்கு மூலபுருஷர்களாயிருந்த விருதுநகர் வாசிகள் இத்தருணத்திலும் மதுரைவாசிகளுடன் ஒத்துழைப்பார்களென்றே நம்புகின்றோம்.

பட்டிவீரன்பட்டி ஸ்ரீமான் சௌந்திரபாண்டிய நாடார் எம். எல். ஸி. அவர்களை திருநெல்வேலி ஜில்லாவிற்கு ஒரு அபேக்ஷகராக முன்வரும்படி வேண்டினோம். திருநெல்வேலி ஜில்லாவிலும் குலாபிமானிகள் பலர், ஸ்ரீமான் பு. அ. சௌ. அவர்களுக்காக இப்போதே பிரசாரம் செய்து வருவதாக நமக்கறிவித்திருக்கிறார்கள். நாமும் நமது சுற்றுப்பிரயாண ஏஜெண்டுகளை அந்த ஜில்லாவிற்கு அனுப்பியிருக்கிறோம். சமீபத்தில் நடக்கும் மகாநாட்டிலும் இதைப்பற்றிய தீர்மானங்கள் வருமென்றே நம்புகின்றோம். திருநெல்வேலியில் மகாநாடு கூட்டத்தவறிவிட்டபோதிலும், நடக்கும் மகாநாடு விசேஷ ஆர்ப்பாட்டத்துடன் நடக்கும் என்று தெரியவருகிறது. சமூகத்தலைவர்கள் பலரும் விஜயஞ்செய்வார்களென்று நம்புகின்றோம். திருநெல்வேலி ஜில்லாவில் நாடார்குல ஓட்டர்களை ஒழுங்கு செய்வதற்கும் சட்டசபை விஷயமாய் ஓட்டர்களுக்கு எடுத்துச்சொல்லவேண்டிய காரியங்களுக்கும், நடக்கும் மகாநாடு கூடுவது ஏற்றசமயமாயிருப்பதால், எல்லாத் தலைவர்களும் வந்து குழுமுவார்களென்று எதிர்பார்க்கின்றோம்.

## மேலவாசலின் கால மாறுதல்.

(3)

மதுரை மாநகர் சொக்கர்மீனாக்ஷியம்மன் ஆலயத்தை அறுபது வருடத்திற் கொருதடவை கும்பாபிஷேகஞ் செய்வதுவழக்கமாம். அவ்வழக்கம்போல் நாளது வருஷத்திலும் கும்பாபிஷேகம் நடத்த சகல ஏற்பாடுஞ்செய்து பரபரப்புடன் நடைபெற்றுவரும் ஷை ஆலயத்தின் நான்குபெரிய கோபுரவாசலுக்கும் உட்புறத்திலுள்ள நற்குபாண்டியன் திருமதிலென்றுபெயர். அம்மதிலிலுள்ள மேலக் கோபுரவாசல் நாடார்களுக்கும் நாயக்கர்களுக்கும் ஏற்பட்ட தாவாவில் வெகு காலத்திற்கு முன்பே பூட்டப்பட்டது. இதற்கு முந்திய கும்பாபிஷேகங்களிலும் மற்றப்பெரிய உற்சவ காலங்களிலுங்கூட அவ்வாசலைத் திறக்கவில்லை. இப்போது நடந்த கும்பாபிஷேகத்திற்காக ஜனங்கள் நடமாடுவதற்கு கொஞ்சம் கஷ்டமயிருப்பதை உத்தேசித்து அம்மேலவாசல் நாடார்களின் அனுமதியின்றி கோவில் நிர்வாகிகள் திறந்துவிட்டார்கள்.

இச்சம்பவம் நடந்தமறுதினமே காட்டுத்தீபோல் எங்கும் பரவி விட்டது. நாடார் சமூகத்திற்குள் சற்றே பரபரப்பு ஆத்திரமும் உண்டாயின. வாலிபச் சாரணர்களுக்கும் கொஞ்சம் ஆவேசமுண்டாயிருக்கத்தான் வேண்டும். ஆயினும் அவர்கள் தங்கள் தாய்ச்சங்கமாகிய நாடார் மகாஜன சங்கத்தின் நோக்கத்திற்கு மாறாக ஒருவேளும் ஜாதித்தலைவர்களுடைய உத்திரவுக்குக்கட்டுப்படாதவர்களாகவேனும் ஒருநாளுமே நடந்துகொள்ளமாட்டார்களென்பது உலகமறிந்த விஷயம். என்றாலும் கும்பாபிஷேகம் முடிந்தவுடனேயாயினும் அவ்வாசலைப் பழையபடி மூடிவிடவேண்டுமென்பதே நாடார்களிற் பெரும்பாலோருடைய விருப்பம். அப்படியே மூடிவிட்டதாகவும் கேள்விப்படுகின்றோம்.

இதற்கிடையில் அவசரப்பட்டு கோவில்நிர்வாகிகள் பீதியால் ஒரு குற்றஞ்செய்துவிட்டதற்கு மிகவும் விசனிக்கவேண்டியதாயிருக்கிறது. அதாவது ஆனி மீ 1௳ மதுரைக்கோவிலில் திறந்துவைத்திருக்கும் தங்கள் மேலவாசல் வழியாக நாடார்கள் செல்லப்போவதாகவும் தடுத்தால் சத்தியாக்கிரஹம் பண்ணுவார்களென்றும் அதற்காக நாகையிலிருந்து 500 தொண்டர்கள் வருவதாகவும் ஒருவர் சுதேசமித்திரன் பத்திரிகையிலெழுதியிருந்ததைப் பார்த்தவுடனே வீண்பீதிகொண்டு கோவில் உட்கதவுகளையெல்லாம் பூட்டிக்கொண்டு வெளிவாசல்களில் தேவஸ்தான சேவகர்களையும் ரிஸர்வ் போலீஸ்களையும் காவல்வைத்துக் கொண்டிருந்தார்களாம். அப்போது திருவாடானைக் கிராமத்திலிருந்து வந்திருந்த இரண்டு நாடார்கள், வழியில்நின்றிருக்கும் சில துஷ்டர்கள்பிடித்துக் கஷ்டப்படுத்தி கோவில்நிர்வாகிகளிடம்கொண்டுபோய் நாடார்கள் கோவிலுக்குள் வந்துவிட்டனரென்றுகூறவே, அவர்களை போலீஸ்ஸ்டேஷனுக்கு அனுப்பவும், அவர்கள் மாஜிஸ்திரேட்டின் முன்கொண்டுபோய் நிறுத்தவும் அங்கு நியாயாதிபதி இருவரையும் விடுதலை செய்தனுப்பினாராம். ஆஹா! வடிகட்டிய மூடர்கள் எலி வேட்டைக்கு தவுலடிக்கமாதிரி நாடார் சமூகத்தின் உண்மையான நோக்கங்களை அறியாமலும், சமுதாய வாழ்வில நாடார்களைச் சிலஆலயங்களில் மட்டும் அகற்றிவைத்திருப்பது அறியாமை. அவ்வறியாமை அவர்களை விட்டகலுங்காலம் வெகுவில் வரக்கூடுமென்று நாடார்கள் நிசப்தமாயிருக்கிறார்களென்பதையும் அறியாமல் கோவில்நிர்வாகிகள் கோவிலைச்சுற்றிக் காவல் வைத்தார்கள். பண்டு

## குறிப்புகள்.

### நெருங்கிவிட்டது கவலை வேண்டும்.

ஆகஸ்ட் மீ 7௳ க்குள் பூர்வாங்கமாகத் தொகுக்கப்பட்ட வோட்டர் ஜாப்தா சென்னை அரசாங்கத்தார்கள் தயாரிப்பார்கள். இதற்கு ஆக்ஷேபணைகளும் புதிய வோட்டர்கள் மனுச்செய்து கொள்வதும் ஆகஸ்ட் மீ 27௳ க்குள் முடிந்துவிடவேண்டும். செப்டம்பர் 4௳ க்குள் ஆக்ஷேபிப்பவர்களின் பெயர்களும் மனுச்செய்து கொள்ளும்புதிய ஓட்டர்களின் ஜாப்தாவும் வெளியிடப்படும்.

செப்டம்பர் மீ 12௳ க்குள் கடைசி ஓட்டர் ஜாப்தா தயாரிக்க அதிகாரிகள் ஆரம்பித்து விடுவார்கள்.

அக்டோபர் மீ 9௳ க்குள் முடிவான ஓட்டர்ஜாப்தா வெளியிடப் படும். மேல்கண்ட விபரப்படி ஓட்டர் ஜாப்தா தயாரிக்குமுன்னமே நமது நாடார் மகாஜன சங்க நிர்வாகிகள் ஒரு ஸ்பெஷல் கவுன்ஸில்மீட்டிங்கூட்டி நம்மவர்களின் ஓட்டர் ஜாப்தாவை சரிபார்த்து தவறுதலிருந்தால் ஆங்காங்குள்ள குலாபிமானிகளைக்கொண்டு திருத்த ஏற்பாடு செய்ய வேண்டும். முதலில் இந்த வேலையை யாவது முடித்துக்கொண்டு தயாராயிருந்தால் நலமாயிருக்கும். நம்குல அபேக்ஷகர்களுக்கு சோம்பல் வந்துவிட்டதுபோல் தெரிகிறது. உண்மையான வைராக்கியமும் தெரியவில்லை. ஆசையுள்ளவர்கள் முன் வர யோசிக்கிறார்கள். வந்தவர் போகிறார். வருவதற்கும் போவதற்கும் யோசிப்பதற்கும் இது சமயமில்லை.

### 9-வது கான்பரன்ஸ்.

பாளையங்கோட்டையில் 9-வது கான்பரன்ஸ் எப்படியும் நடைபெறுமென்று எண்ணி இருந்தோம். ஆனால் மதுரையில் தான் நடக்கப்போகிறதென்று அண்டு அழைப்பு நோட்டீஸ் கிடைக்கப்பெற்றோம். 9-வது கான்பரன்ஸு இப்படியும் அப்படியும் இழுபடுவதைப்பார்க்க பரிதாபமாய்த்தானிருக்கிறது. காலாகாலத்தில் கவனிக்காத குற்றத்திற்கு கஷ்டப்பட்டுத்தானாகவேண்டியதிருக்கிறது. மதுரையிலுள்ள நம்குலாபிமான கனதனவான்களாவது செப்டம்பர் மீ 20 தேதிக்குள்ளாவது கான்பரன்ஸை நடத்துவார்களென்று நம்புகின்றோம். 9-வது கான்பரன்ஸில் பலவிஷயங்கள் கவனிக்கப்படவேண்டியதிருக்கிறது.

---

வேட்டையில்லாயாதநாய், கரிப்பானையைக்கண்டாலும் பயப்படுமென்பதுபோல் காவலாளிகள் நிரபராதிகளான இருநாடார்களைக் கண்டஞ்சி காரியத்தல்மிஞ்சிகொண்டார்கள். மதியில்லா நிர்வாகிகளும் நேர்ந்த விசாரியாமல் நீதிஸ்தலத்துக் கனுப்பி விட்டார்கள். நீதிமான் சேதி தெரிந்துசெல்லும்படி சொல்லிவிட்டனராம்.

சாகிறவனுக்கு சமுத்திரம் முழங்காலளவென்பதுபோல் நாடார்களென்னைறக்கிருந்தாலும் இறப்பதே நிச்சயமென்று கோவில்சமத்துவம் பெறுவதே முழு லட்சியமெனவெண்ணித் துணிந்து விட்டால், கோவில்ச் சேவகர்களும் அவர்கள் கொண்டுவந்த சேவகர்களும் என்ன செய்வார்கள்- நாடார்களைத் தடுத்துவிட முடியுமா? அவ்வளவு உக்கிரம் நாடார்களுக்கு அதுவிஷயமாய் இன்னும் உண்டாகவில்லை. மதியாதான் தலைவாசல் மிதியாதேயென்ற ஔவைமொழியிருக்கின்றது. இருந்தாலும் நாடார்களுள்ளத்தில் புகைந்துகொண்டிருக்கும் நெருப்பானது மேலெழுந்து எரியாமற் போகுமா? பல நூற்றாண்டுகளாக ஒரு பெரிய ஜனசமூகம் தனக்குள் அடக்கிவைத்துக் கொண்டிருக்கும் சக்தி வெளிப்பட்டால் அது உத்தேசித்த பலனை அடையாமற் போகாது. மேலும் நாடார்களுடைய உள்ளுணர்ச்சியைப் பற்றி மேற்போக்காய் அறிந்தும், அறியாத கற்றறிமூடர்கள் தான் மதிக்காமலும் அவர்களுணர்ச்சி ஞாயமென்பதை ஒப்பாமலுமிருப்பதுடன், தப்பாக வர்த்தமான பத்திரிகைகளிலும் ஆபாசவார்த்தைகளை சக்கிவிடுகின்றார்களே தவிர நேர்மல சிந்தையுள்ள தேசாபிமானிகள் நாடார்களுடைய வாதம் சரியென்றே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். (இன்னும் வரும்)

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

### ஏழல் மகாநாடு கூடும் தினத்தை எதிர் பாருங்கள்.

நாளது ஆடி மீ 28௳ பயிலூர் ஏறல்மா நாடு வெகு சிறப்பாய் நடைபெறத்தக்கவாறு அப்பகுதியிலுள்ள குலாபிமானிகள் பிரபல ஏற்பாடு செய்துகொண்டு வருவதாக நமக்கு அறிவிக்கிறார்கள். பற்பல தீர்மானங்களும் பந்தியாசங்களும் செய்யப்படும். மகா ஜனங்கள் தவறாமல் விஜயஞ் செய்து மகாநாட்டில் செய்யப்படும் தீர்மானங்களை அனுஷ்டானத்திற்கு கொண்டுவருவதே தங்கள் கடமையாக மதிக்க வேண்டும்.

## சுதந்திரம்.

(முன் தொடர்ச்சி)

மேனாட்டு ஸ்திரீகள் குடும்ப வாழ்க்கையை லௌகீக இச்சையை அனுபவிக்கவே ஆண்டவன் ஏற்படுத்தியிருப்பதாலும், ஆணும் பெண்ணும் சமமாகவே லௌகீக சுகத்தை அனுபவிப்பதாலும், அதிலும் பெண்கள் சுகம் அனுபவிக்கக் காரணபூதர்களாயிருப்பதாலும், பெண்கள் ஆணிக்கு மேலோங்கவேண்டுமென்று பேசி குடும்பவாழ்க்கையைக் கெடுத்து வருகிறார்களென்று சொன்னேன்.

மேனாட்டு ஸ்திரீகள் கிறிஸ்தவர்களென்பதுடனமையே, தவிர கிறிஸ்துவின் உபதேசங்களின்படி நடப்பவர்கள் வெகு சிலரேயென்பதும், அன்னார் பெரும்பாலும் கிறிஸ்துவின் தீர்மானங்களில் நிலைபெறாதிருக்கிறவர்களோடு போராடுகிறவர்களென்று சொல்லுவதும் உலகறிந்த விஷயம்.

நம் இந்தியா தேசத்தில் அரசாளும் ஆங்கிலேயர் கிறிஸ்து மதத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பதாலும் அவர்களும் மற்ற மேனாட்டு அரசாங்கங்களின் குடிகளும் வெகுவாய் கிறிஸ்தவர்களானபடியால் அவர்களுடைய நடையுடை பாவனையே கிறிஸ்தவமார்க்கத்தின் நடையுடை பாவனை ஆசார ஒழுக்கங்களென்றும் அவர்களைப்போல் நடந்தால்தான் கிறிஸ்து தர்மத்தை அனுசரித்ததாகுமென்றும் ராஜவிஸ்வாசத்தை காட்டுவதாகுமென்றும் பொதுவாக இந்தியாவில் ஒருஎண்ணம் பரவியிருக்கிறது. இந்தத்தப்பெண்ணம் இந்தியாவையும்முக்கியமாய் இந்திய கிறிஸ்தவர்களையும் மேனாட்டு நாகரீகப்படுகுழியில் அமிழ்த்தி விடுமென்று பெரிய மேதாவிகள் வெளியில்வந்து அலற ஆரம்பித்துவிட்டார்கள்.

இந்த மஹான்களில் ஸ்ரீமான் சி. யப். ஆண்டிரூஸ் ஒருவர். இவர் நம் நாட்டிலுள்ள சுத்தக்கருப்பு, அரைக்கருப்புப்பாழ்ப்புத்துரைகளைப் போலில்லாது. சுத்தமேனாட்டு அசல் வெள்ளையர் உண்மையை அறிந்தஞானி, கிறிஸ்துவின் உபதேசங்களை பூராவும் அனுஷ்டிக்க விரும்பி அதன்படி நடந்துவரும் உண்மைக்கிறிஸ்தவர். இந்தமகான்சொல்லுகிறார். "மேனாட்டாரில் பெரும்பாலோர் கிறிஸ்துவின் பேரால் சகிக்கொணாத அட்டூழியங்கள் செய்துவருவதோடு கிறிஸ்துவின் தர்மம் அதுதானென்று மெய்ப்பிக்கவும் முயர்ச்சிக்கிறார்கள். உலகத்தில் பாவத்தை நீக்கி எந்த ஒன்றை நிலைநாட்ட தன்பிராணனை தத்தம் செய்தாரோ அந்தப் புண்ணியத்தை அவருடைய தானென்று சொல்லும் கிறிஸ்தவர்கள் கைவிட்டு விட்டார்கள்- தேவகுமாரன் தன்னைப்பலிகொடுத்தது வீணாகிவிட்டதே" யென்று மனமுறுகிச்சொல்லுகிறார். "ஏசுகிறிஸ்து உன்னை ஒரு கன்னத்தில் அடித்தால் அடுத்த கன்னத்தைக் காட்டு" யென்று சொல்லியிருக்க பலஹீனமான தேசத்திலுள்ள ஜனங்களை தங்கள் ராணுவத்தைக்காட்டி பயமுறுத்தி அடிமைபடுத்தி அவர்களுடைய பொருளாதாயங்களை உறிஞ்சி மானுங்கனியாய் அனுபவித்து இன்புறுகிறார்களே, இது எந்த தருமத்தைச்சேர்ந்த,தென்றுகேட்கிறார். ஆனதால் இந்திய கிறிஸ்தவர்கள் தங்களுக்கு உண்மையென்று தங்கள் வேதத்தின் மூலமாக அறிந்தபடியே நடக்கவேண்டுமேதவிர குருட்டுத்தனமான மேனாட்டாரை பின்பற்றவேண்டியதில்லை யென்று சொல்லவேண்டியதில்லை. நாடார் ஜாதியிலும் பெரும்பான்மையான கிறிஸ்தவர்களிருப்பதால் இந்த உண்மையைஅவர்களுக்கு அறிவிக்கவேண்டியது அவசியமாயிருக்கிறதுபொதுவாகஉலகம் பூராவும் ஸ்திரீகளின் தர்மம் ஒரேமாதிரியாகவே ஆசார அனுஷ்டானங்களில் வகுக்கப்பட்டு சிற்சில மாறுதல்களே ஏற்பட்டிருக்க வேண்டியதே இயற்கையானதால் பொதுவாக ஸ்திரீதர்மத்தையும் நாடார் ஸ்திரீகளின் ஆசார அனுஷ்டானங்களையும் கவனிப்போம்.

(இன்னும் வரும்)

சுதந்திர தாஸன்.

## ரஸத்திரட்டு.

### பலனை க்கணிக்க வண்டாம்.

யாரொருவர் எவ்வித பலனின்றிப் பொதுஜன சேவை செய்யின் அன்னோரை பரந்நோக்கத்தோடு உலகம் போற்றிப்புகழ்கின்றது. இது இவ்விருபதாம் நூற்றாண்டில் வெகு சகஜம். இவ்விதமாக பலனையும் புகழ்ச்சியையும் எதிர் பார்க்கும் மனம் இருதய சுத்தியில்லாவர்களுக்குத் தலையைக் காட்டுகின்றனர் (தாயமனநலமுடைய மகாமூர்த்திகள் கூடும் கழகத்தில் இத்தகையாரின் வாய்மாலக்குமடங்கி ஈசடர் லோகத்திற்கு வழியனுப்பப் படுகின்றனர்) நாம் ஓர் காரியத்தைச் செய்வதற்கு முன் பலனை யெதிர்பார்ப்பது மடமையாகும். ஆனால் பொதுஜனஊழியத்தை தமது கடமையெனக் கொள்ளல் வேண்டும். உண்மையான உணர்ச்சியினின் எழவேண்டும் காரியசித்தியுடைய கருத்தை முன்வைக்கவேண்டும். பின், வரும் பலன் தானேவருமன்றோ!

• • •

### மனிதசங்கல்பம் பெரிதா? தெய்வசங்கல்பம் பெரிதா?

பிறரால் எதிர்பார்க்கப் படாததோர் செல்வத்தையோ சீர்நிலையையோ ஒருவன் அடையின் அதைப்பார்த்து பலரும் தம் சித்தத்தைப் பலவாறு சிதறச் செய்கின்றனர். இச்சந்தர்ப்பத்தில் ஒவ்வொருவரும் விக்கிவிகாத்துப் போய் ஆ! அப்பா! வென மதிமறன்கின்றனர். ஆனால் குறுகிய புத்தியையுடைய குடிகேடர்கள் மனது அங்கலய்த்துப் போய் எதிர்பாரா விதமாய் நேர்ந்ததோர் காரியம தெய்வ சங்கல்பமெனக்கருதாது டச்சித்தம் போலடினவர்களாய் தமது வல்லமையை நினைத்து நினைத்து கெக்குகெக்குறுகின்று கெஞ்சசப் புண்ணாக்கிக்கொள்வேரன்றி அதை தன்வல்லமையால் சிறிதும் அசைக்கமுடியுமெனக் கனவிலும் கருதத்தான்முடியுமா? கருதினும் காரியந்தான் கைகூடுமா? ஒருக்காலும் முடியவேமுடியாத தெய்வசங்கல்பமொன்றல்லவோ மேலேயிருக்கிறது.

• • •

### எதுவும் நான் செய்வது தனக்குத் திருப்தியே-

ஓர் காரியத்தை ஒருவர் நேர்முகமாய் வெகு கருத்தோடும் உருத்தோடும் மேல் பார்த்துவருவதில் இடையிலதாவது சற்று பிரிபவரின், பிரிபவரின் மனம் ஓர் நிலையில்லாது எது என்னவிதமாகுமோ வென மனவாதையடைகின்றனராகையால் இடையில்வந்து அக்காரியத்தை எடுத்தாடும்பயனின்செய்கையில் எவ்விதமாதுமோர் குறையை யெழுப்பாமலிருப்பது அரிது. இக்குறையைச் செய்ததாக ஏற்பவன் அதைத்தான் எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ளமாட்டான் அரியதாம். எல்லாம் தான்செய்தது தனக்குத்திருப்தியேயாம்.

• • •

### எதற்குமோர் எல்லை உண்டு.

மனிதர் ஆசை கொண்டு செய்யும் காரியம் பல உண்டு. இதில் ஓர் காரியத்தில் தாம் வைத்திருக்கும் அவாவின் அளவிற்குத் தக்கவாறே அதை துரிதமாகவோ, சாவதானமாகவோ, சமரஸமாகவோமுடிப்பிக்கமுயற்சிப்பர் இதுவேவரம்புக்குட்பட்டதுமாகும்: இதை விடுத்து சாவதானமாய் முடிப்பதை அவஸரப்பட்டும்,துரிதமாய் முடிப்பதை தூக்கத்தில் விட்டுவிடுவதும் காரியக் கெடுதியாகும். இன்னும் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு காரியத்திலும் பொருளிலும் ஓர் காலத்தில் மனம ஆசையோடு நாடுகின்றது. அப்போதுதான் அவ்வக்காரியங்களை முடித்துக்கொள்ள ஏதுவாகும்: அதைவிடுத்து பல சந்தர்ப்பமும ஒத்திருக்கும் ஓர் காரியத்தை சரியான நேரத்தில் வைத்து பரிசுதுக கொள்ளாது பின் மறுசமயம் பார்க்கலாமென சிறிது பின வாங்கின் அக்காரியம் பின் அவனுக்கு சித்தியாகப் போவதுமில்லை. சமய சந்தர்ப்பங்களும் கிடைப்பதும் அரிதே. எதுவும் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்வது நலமன்றோ!

ஜி. அருணாசல நாடார்.

## மதிப்புரை.

### நல்லார்க்கு நண்பன்.

இஃதோர் மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. இப்பத்திரிகையின் இரண்டாவது சஞ்சிகை ஒன்று கிடைக்கப்பெற்றோம். அதில் பல அரிய பெரிய விஷயங்களும் விபாசங்களும் பொதுச்சமரசசாரங்களும் அடங்கியிருக்கிறது. பொதுவிஷயங்கள் பள்ளிப்பாலர்களுக்கு நல்லறிவு உணர்ச்சி நல்லொழுக்க முதலிய நற்பதக்க வழக்க ஆசார அனுஷ்டான நடையுடை பாவனைகளை யுண்டாக்கவல்லதே.மாணவர்கள் இப்பத்திரிகை தொடர்ந்து வாசித்துவந்தால் நல்ல பயன் அடைவார்கள் என்பது திண்ணம். வருடச்சந்தா ரூபாய் ஒன்றுதான். விலாசம்—

எம். அ. நாலவாதிரியான்
'நல்லார்க்கு நண்பன்' பத்திராதிபர்,
நூல்வணிகர் தெரு, இலட்சுமிபுரம்
மயிலாடி போஸ்டு, திருவிதாங்கூர்.

### ஆரோக்கியம்: (Health)

இம்மாதம் புனைந்த ஆங்கில மாதாந்திரப் பத்திரிகையின் பிரதி யொன்று கிடைக்கப்பெற்றோம். இஃது டாக்டர் யு. இராமராவ். எம். எல். ஸி. அவர்களின் பத்திராசிரியர் தலைமையின்கீழ் வெளிவருகின்றது. இது ஆங்கிலேய பாஷையில் பதிப்பிக்கப்படுகிறதாயினும் பல அரிய சுகாதார விஷயங்கள் அடங்கியிருக்கிறது. இதன் தலையங்கத்தில் தாவரார்க்க உணவாதிகளுக்கும் மாம்ச பதார்த்த உணவாதிகளுக்குமுள்ள தாரதம்மியங்களை வெகு தெளிவாக எடுத்துக்காட்டி, மாமிச பதார்த்தத்திலுள்ள சத்தான பாகமும் தாவர பதார்த்தத்திலுமிருக்கிறதென்றும்,ஒரு பிராணியின் மாமிசத்தை அருந்தும் அந்த பிராணிக்குள்ள நோய், சாப்பிடுகிறவனையும் பிடித்துக் கொள்ளுமென்றும். தாவரவர்க்க பதார்த்தங்களை சாப்பிடுவதினால் சுருசுருப்பும் கடும் வேலையினால் களைப்பின்மையும் இரத்த விருத்திசத்தும் அதிகப்படுகிறதென்றும், நன்றாய் விளக்கியிருக்கிறது. இன்னும் ஆரோக்கியத்திற்கு ஏற்றபல விதிகளையும் சுகாதார முறைகளையும் தேகாப்பியாச பாதுகாப்பு வழிகளையும் சதாரண நடையில் எழுதப்பட்டிருக்கிறது. அதிகமான ஆங்கிலேய பழக்கமில்லாதவர்கள்கூட சாதாரணமாய் வாசித்து கருத்தை கிரகித்துக்கொள்ளலாம் வருடச் சந்தா ரூ 1—8—0 தான் விலாசம்—

DR. U RAMARAU M. L. C;
Editor, of The "HEALTH"
323· Thambu chetty st.
G. T. Madras.

## நாகூர்.

### சமாதானக் கோண்டாட்டம்.

(நமது நாகபட்டணம் நிருபரிடமிருந்து)

5௳ நாகூரில் திருக்கிய சமாதானக் கொண்டாட்டத்தை முன்னிட்டு நாகூர் கிலாபத்து கமிட்டியின் அறிக்கைப்படி தர்க்காஷரீபில் பலவிதக் கொடிகளிலும் தோரணங்களாலும் வெகு விமரிசையாய் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது

நவாப் வாலாஜா ஜும்மா மசூதில் ஹோத்துபாவுக்குபின் விசேஷ பிரார்த்தனைகள் நடைபெற்றது.

மாலை 5 மணிக்கு தர்க்காஷரீபிலிருந்து யானை கொடிகள் முதலிய விருதுகளுடனும் பஜனை தப்புசகளோடு பஜனை செய்துகொண்டு ஊர்வலம் புறப்பட்டு பல வீதிகள் சுற்றி மணி 6-க்கு கடல் கரையில் ஓர் மகாநாடு கூடிற்று:கிலாபத்து கமிட்டி காரியதரிசி ஜனாப் மு. யூ. நவாப் சாயப்புஅவர்களால் பிரரேபிக்கப்பட்டும் சபைததலைவர் ஜனாப் த. செ. மு. மரைக்காயர் அவர்களால் ஆமோதிக்கப்பெற்று நாகை தாலுக்கா காங்கிரஸ் சபை காரியதரிசி ஸ்ரீமான் வி. அய்யாசாமி அய்யர் அவர்கள் அக்கிராசனம்வகித்து துருக்கியின் முற்கால தற்கால நிலைமையைப்பற்றி வெகு தெளிவாய் 1½மணி நேரம் உருக்கமாய் பேசினார்.

அதில் கீழேகண்ட தீர்மானங்களை ஜனாப் மு. யூ. நவாப் சாயப்பு அவர்களால் பிரரேபிக்கப்பெற்று ஜனாப் த. செ. மு, மரைக்காயர் அவர்களால் ஆமோதிக்கப் பெற்று மகாநாட்டில் ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டது.

மகாமாட்சிமை தங்கிய அமீருல் மூமினீன் கலிபத்துல் முஸ்லிமின் காஜிசுல்தான் அப்தல் மஜீத்கான் அவர்களையும் ஸைபுல் இஸ்லாம் (இஸ்லாத்தின் வாள்) என்ற பட்டத்தைப் பெற்றவரும் துருக்கியின் கௌரவத்தை உலகில்நிலைநாட்டியவரும் அங்கோரா அரசாங்கத் தலைவருமான மாட்சிமைதங்கிய காஜிமூஸ்தப்பா கமால்பாஷா அவர்களையும் இக்கூட்டம் முழுமனதோடு பாராட்டுகிறது.

ஜஸிரத்துல் அரப் அரேபியா இராக்கு பைத்துல் முகத்தீஸ் ஸிரியாமுதலிய புண்ணிய தேசங்கள் பூரணசுயேச்சை அடைந்து அவைகள் கலிபாவின் ஆதிக்கத்தில்-ஆகவேண்டுமென்றுஇக்கூட்டம் வற்புறுத்துகிறது.

ஹிந்து முஸ்லீம்கள் ஒற்றுமையுடன் இந்தியா சுயராஜ்ஜியமடைய பாடுபடவேண்டும் என்றும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

N. B இக்கூட்டத்தில்படித்தவர்களும்தனவந்தர்களும் மேதாவிகளும் மவுல்விகளும் வந்துகலந்து கொள்ளாததைப்பற்றி குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. இவர்களின் நோக்கந்தான் என்ன?

## பொதுவர்த்தமானம்

### மகாத்மாவின் தேகநிலை.

ஸ்ரீமதி கஸ்தூரிபாய், காந்திரும் வேறு சிலரும் மகாத்மாவைச் சிறையில்கண்டனராம்—

மகாத்மா காந்திக்கு மீண்டும் வயிற்றில் வலிகண்டாயிருக்கிறது. மருந்தும் பழமுந்தான் அவருக்கு ஆகாரம். அவருடைய எடையில் இப்போது 1 பவுண்டு குறைந்திருக்கிறது. அளவுக்குமிஞ்சிய வாசிப்பும் சிந்தனையுந்தான் இதற்குக் காரணமென்று மகாத்மாவே சொன்னார். அவர் உற்சாகமாகவே இருக்கிறார். அரையணிநேரம் மாவரைக்கிறார் தேசியக்கொடி சத்யாக்கிரஹத்துக்காக ஜெத் ஜமன்லால் கைது செய்யப்பட்டதைக் கேட்டு அவர் மிகவும் சந்தோஷப்பட்டார். மகாத்மா காந்தி. தமது மனைவி என் இன்னம் கைதுசெய்யப்படவில்லையென்று கேட்டார்:தம்மையாரும்கைதுசெய்யவில்லை என்று ஸ்ரீமதி கஸ்தூரிபாய் பதிலளித்தார். (சுதேசமித்திரன்)

• • •

### ஓர் அபூர்வமான விவாகம்.

பிரபல ஹிந்து ஒரு முஸ்லீம் பெண்ணை மணக்கிறார்.

மந்திரி ஹரி கிருஷ்ணலாலின் மூத்த குமாரன் கார்லால் கௌபா இவ்வூர் பாரிஸ்டரான ஜனாப் அலிஸ் அஹமதின் புத்திரியான மிஸ்ஹஸ்னாலவை இன்றையத்தினம் மணந்தார். விவாகத்தின்போது மணமகளின் பெற்றோர்கள் மாத்திரம் ஆஜராயிருந்தனர்.

பஞ்சாப்பில் இப்படிப்பட்ட விவாகம் இதுவரை நடந்ததில்லை. வைதீக ஹிந்துக்கள் மத்தியில் இதுபெருங் கிளர்ச்சியுண்டுபண்ணி யிருக்கிறது. விவாகம் நடந்தபிறகுதான் லாலாஹரி கிருஷ்ணலாலுக்கு அதுவிஷயம் தெரியுமாம். தம்பதிகள் உற்சாகமாய் காலம் கழிக்க மர்ரீ என்றபட்டணத்திற்குச் சென்றிருக்கின்றனரும்.

• • •

### உலகத்தின் வயது

உலகம் உற்பத்தியாகி இவ்வருஷ ஆரம்பம் வரை 196 கோடி 8 லக்ஷத்து 53 ஆயிரத்து 23 வருடங்களாகிறதென்றும் பிரளயம் வந்து உலகம் அழிவதற்கு இன்னும் 233 கோடி 32 லக்ஷத்து 26 ஆயிரத்து 977 வருஷங்கள் பாக்கியிருக்கிறது என்பதாக ஓர் சாஸ்திர ஞானி கூறுகிறார்.

• • •

### பச்சை நிறமுள்ள பருத்தி

அமெரிக்கா தேசத்தில் ஒரு பருத்தி தோட்டக்காரர் பச்சை நிறமுள்ள பருத்தியைப் பயிர் செய்தாராம். அவர் இதைப்போலவே கருப்புப் பருத்தியும் பயிர் செய்ய இயலுமென்று கூறுகிறார். இப்படிப்பலநிறமுள்ள பருத்திகளை விளைவிக்கப் படுமானால் சாயம் போடும் வேலைகள் குறைந்துவிடும்.

• • •

### சாராயப் பொடி.

சாராயம் திரவப் பதார்த்தம் என்பது எல்லாருக்கும் தெரியும். சாராயம் குடிப்பதைப் பழக்கமாய்க் கொண்டவர்களுக்கு அவர்கள் வெளியூர்களுக்குச் சென்றாலும் தங்களுடன் சாராயப் புட்டியை எடுத்துச்செல்ல வேண்டியவர்களாகவே யிருக்கின்றார்கள். புட்டி உடைந்துபோகாமல் காப்பாற்றுவது கஷ்டமாயிருக்கிறது. அதற்காக பிரான்ஸு தேசத்திலுள்ள மார்ஸெல் ராபர்ட் என்பவரால் சாராயப்பொடி கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது சாராயத்தைக் கெட்டிப்படுத்தி அதைப் பொடித்து வைத்திருக்கிறார். இப்பொடியைச் சுடுதண்ணீரில் போட்டு கலக்கி ஆரவைத்துவிட்டால் உயர்ந்த சாராயமாகி விடுகிறதாம்.

# சமத்துவம்.

## காங்கிரஸ் பஜார்.

(முன் தொடர்ச்சி)

இக்கிராமத்தில் பிரிட்டிஷ் நாடார்களுக்கு லோகமான்யதிலகர்கொடுத்த தஸ்பெபிரசுரத்தில்காணப்படும்விஷயம்:—

"—ராஜபக்தியுள்ள இந்தியாவை கீழ்த்தேசத்து நூற அயர்லாந்தாக மாறும்படியா விடுவார்கள்?"—

நாடார்:—அயர்லாந்துதேச சரித்திரம் தங்களுக்கெல்லாம் தெரிந்திருந்தாலும் இது சமயம் கொஞ்சமாவது சொல்லவேண்டியது அவசியமென்று நினைக்கிறேன்.

மஹாராஷ்டிரத் தலைவர்:— ஆமாம் கூடியவரை சுருக்கமாகச் சொல்லி மேலே சங்கதியைச் சொல்லுங்கள்.

நாடார்:—அயர்லாந்து தேசம் இங்கிலாந்துக்கு வெகு சமீபத்திலுள்ளதும் கிறிஸ்தவர்களில் ஒருபிரிவாகியரோமன் காதலிக் மதத்தைச்சேர்ந்த பெரும்பான்மைக்குடிகளுடைய வித்தியாசத்தைத்தவிர ஐரோப்பிய வெள்ளையர் இனத்தைச் சேர்ந்த குடிகளையும் அவர்கள் இங்கிலாந்து ஜனங்களைவிட விசேஷசுறுசுறுப்பு, தைரியம் அறிவு செல்வம் படைத்தவர்களாகயிருந்தும் இங்கிலாந்து, ஸ்காட்லாண்ட், வேல்ஸ் அயர்லாந்து ஆகிய நாலு தேசமும்சேர்ந்த பிரிட்டிஷ் பார்லிமெண்டிற்கு சரியான பிரதிநிதித்துவமுள்ள ஒரு தேசமாயிருந்தும் கூட்டுப்பார்லிமெண்டிலிருந்து விலகித் தங்கள் தேசத்தின் நிர்வாகத்தைத் தனியே நடத்தவேணுமென்று தலைவர்கள் தீர்மானித்து நெடுநாளாகப் போராடி வந்தார்கள். பார்லிமெண்டில் தங்கள் கோரிக்கையை அலக்ஷியமாக எண்ணுவது தெரிந்து ஆத்திரம் கொண்டு மேலும் மேலும் தீவிரமாகக் கிளர்ச்சிசெய்துவந்தார்கள். உள்ளூரப்புகைந்து கொண்டிருக்கும் ஆத்திரம் எத்தனை நாள்தான் வெளிவராமலிருக்கும். கடைசியில் பகிரங்கமாக இங்கிலாந்தோடு கலகம்செய்யஆரம்பித்தார்கள். உலகத்தில் அநேக இடங்களில் அயர்லாந்திற்கு அனுதாபம் காட்ட ஆரம்பித்தார்கள். இங்கிலாந்தின் மதிப்பு நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வந்தது. முடிவாக உலகோர்முன்னிலையில் தங்கள் மானத்தைக் காப்பாற்றும் நிமித்தமாவது அயர்லாந்திற்கு சுயராஜ்யம் கொடுக்கவேண்டியது அவசியமென்று இங்கிலாந்து அறிந்து கொண்டது.

தேசத்தைஆளுவதில் தங்களுக்குமிஞ்சின ராஜ தந்திரிகள் கிடையாதென்று பெருமைபேசும் ஆங்கில ராஜதந்திரிகளிடம் அயர்லாந்தைப்பற்றிச் சொன்னால் சுருக்கென்று தைக்கும். அதற்காகவே ஸ்ரீ திலகர் அயர்லாந்தை உதாரணம் காட்டி இந்தியா தேசத்தின் குறைகளை எடுத்துச் சொல்லுகிறார்.

இந்தியா தங்களை ஆளுவோரிடம் பரம்பரையாக ராஜபக்திகாட்டும்தேசம். தற்சமயம் தங்களை ஆள்வோராகிய ஆங்கிலேயர்கள் நிறம் மதம் ஜாதி குணம் நடையுடைபாவனை ஆகாரம் ஆசாரம் ஒழுக்கம் மனப்போக்கு முதலிய சகல வழிகளிலும் வேறுபட்டிருக்கும் தங்களை சுதந்திர உணர்ச்சியற்றுப்போகும்படி செய்துவிட்டபடியால் நாட்டில்பஞ்சம் பிணி தோன்றி ஜனங்கள் கஷ்டப்படுவதால் இனி சுயராஜ்யமின்றி இந்தியா முன்னேற்றம் தடைப்படும். ஆனதால் இந்தியர்களுக்கு உடனே கொடுக்கவேண்டும் இல்லையேல் இந்தியர்கள்தீவிரமானபோராட்டத்தில் இறங்கிவிடுவோம். இதுவரை ஒரு அயர்லாந்தால் இங்கிலாந்து உலகத்தில் பெருத்த அவமானமடைந்துவிட்டது. நாடார்களே! இனியும் நீங்கள் கவனியாதிருந்து உங்கள் அதிகாரிகள் இந்தியாவுக்கு சுயராஜ்யம் கொடுக்க தாமதித்தால்இந்தியா கீழ்தேசத்து நூறு அயர்லாந்தாகமாறிவிடும். அப்படிமாறும்படியாகவிடுவீர்களென்று லோகமான்யர் சமயோசிதமாகக் கேட்கிறார். பாண்டிய நாட்டின் அரச பரம்பரையான நாடார்கள் அத்தேசத்து ஜனங்களின் நடையுடைபாவனை ஆசாரம்ஒழுக்கங்களில் சமமாயிருந்தும் முன்னால் ராஜாங்க மாறுபாட்டால் இழந்த ஹிந்துஆலய சுதந்திரம் நாடார்கள் தேசப்பொது மக்களோடு சேர்ந்துவாழ்வதற்கு அவசியம் கிடைத்தாக வேண்டுமென்று சமீபகாலந்தொட்டு நாடார்களுக்குள் ஓர் புதிய உணர்ச்சி ஏற்பட்டுவருகிறது. தேசாபிமானத்திலும் மாதாபிமானத்திலும் தீவிர சிரத்தையுள்ள நாடார்களின் குறைகளை நீக்கவேண்டுமென்றும் இல்லையேல்பொதுவாய் தமிழ்நாட்டுஹிந்துக்களுக்கும் குறிப்பாய் பாண்டியநாட்டு ஹிந்துக்களுக்கும் மானக்கேடாயிருப்பதோடு தேசமுன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறதல்லாமல் நாடார்கள் தாங்கள் இழந்துபோன சுதந்திரத்தை மீண்டும் அடைவதற்கு ஆரம்பித்தால் மற்றுமோர் அயர்லாந்தாய் ஏன் முடியாதென்றால் சிலருக்கு குபுக்கென்று அடைக்கிறது. அப்படி இயக்கம் ஆரம்பிக்கும்படியா பாண்டியநாட்டு ஹிந்துகள் விடப்போகிறார்கள்?

(இன்னும் வரும்)

சமத்துவப் பிரியன்.

# பிரயாணத்தில் கண்ட காக்ஷி.

## இரங்கூன்.

இவ்விரங்கோனையுள்ளிட்ட பர்மாதேசமானது பூர்வம் தேவலோகமென்றும் இந்திராதி தேவர்கள் வசித்தார்களென்றும் சொல்லப்படுகிற தேவலோகமாகவே யிருக்கலாமென்று நம்புகின்றோம். இரங்கூன் இங்கிலீஷ்காரர் வசமானபின்னும் வெகு நாள் பர்மாவைச் சேர்ந்த மாண்டலே என்னும் ராஜதானியானது அவர்கள்வசமாகாமலிருந்து வெகு நாளைக்குப்பின்னர் வசப்பட்டிருக்கிறது, அவ்வரசன் இங்கிலீஷாரிடம் சிறைபட்டவுடன் அங்கேயிருந்த வெள்ளையானைகளானது திக்கையைதரையில் ஓங்கி அடித்து வீரிட்டுஅலறி உயிர்துறந்தனவாம். இன்னும் அந்நாட்டுச் ஜனங்கள் அச்சம்பவத்தை நினைத்து வருஷாவருஷம் கொண்டாடி வருகிறார்களாம். மேலும் பாரதத்தில் சொல்லப்படுகிற காண்டாவனமானது அங்கே காணப்படுகிறது. அருச்சுனன் காண்டாவனத்தை யெரித்தும் அசுரர்களை வதைத்தும் தேவர்களது துயர்தீர்த்து தேவேந்திரனால்கொண்டாடப்பெற்றானென்று சொல்லப்பட்டிருக்கிறதேவலோகமும்காண்டாவனமும் இதுவென்றே யூகிக்கவேண்டியதாயிருக்கிறது. காண்டாவனமென்பது யாராலுமே எரித்துக் காலிபண்ண முடியாத இருண்டவனமென்று சொல்லப்படுகிறது. இப்போதும் பர்மாவில் மரங்களடர்ந்த வனங்கள் அதிகமாயிருக்கிறது. பர்மாவின் இருபாரிசத்திலும் ஸயாம் அஸாம் என்ற இரண்டு நாடுகளுள இந்நாட்டு ஜனங்கள் பர்மாவிலுள்ள தேவர்களுக்கு சதா துன்பம் இழைத்து வந்திருக்கலாம். அத்துன்பம் அருச்சுனனால் அகன்றிருக்கலாம். இப்போதும் அத்தேசவாசிகள் மிகமூர்க்கமுடையவர்களாகவே காணப்படுகிறது பர்மியர்களோ மிகச்சாதுவாயிருக்கிறார்கள் பர்மிய மாதர்களோ தேவமாதர்கள் என்று நினைக்கத் தக்கவர்களாகவே அழகிலும் குணத்திலுங் காணப்படுகிறார்கள்.

போர்முனையில்உயிர்துறந்தவர்கள் தேவமாதர் போகசுகங்களை அநுபவிப்பார்களென்று புராணங்களில்ச் சொல்லியிருக்கிறது. ஆனால் ஒருஜென்மத்தில் ஸ்திரீகளோடு சரியான போகங்களை அநுபவியாமல் சதா போர்முகங்களுக்கே தயாராகிப் போர்செய்துபோர் முனையில் தேகமிழந்தவர்கள் மறுஜென்மத்தில் பர்மாவில் பிறந்து யாதொரு கவலையின்றி பர்மியமாதர் சுகத்தை யநுபவிப்பார்களென்று சித்தாந்தப் படலாம். இப்போது பர்மாவிலிருக்கிற பெண்கள் சுதந்திரம் அப்படியேகாணப்படுகிறது. ஒரு ஸ்திரீ ஒருஇச் சியனையோயாரையோமணந்துஇஷ்டம்போலிருக்கலாம். பந்துஜனங்கள் அதைப்பற்றி ஒன்றும் செய்யலாகாதாம். போர்வீரன் வீரசுவர்க்கம் வந்ததும் தேவர்கள் ஒதுங்கிக்கொள்ள வேணும் தேவமாதர்கள் அவர்களுடன் போகசுகத்தை அநுபவிக்கலாமாம்.

வெள்ளையானை இருந்ததும் அது இறந்ததும் பர்மிய மாதர் குணமணமும் அழகும் ஆடவர் சோம்பலும் அஸாம்ஸயாம் ஆக்ரமிப்பும் காண்டாவனந்தீப் பட்டதும் எத்தனை தேசத்து ஜனங்கள் எத்தனையாயிரம் பேர்கள் வந்திடினும் எப்போதும் சாப்பாட்டுக்குத்தரித்திரமின்றியும்மனக்கிலேசமின்றியும்வாழ்வதும் தேவலோகம் போவதுகஷ்டமின்றிருப்பது போல், இப்போதும் தரைவழியேனும் கடல் வழியேனும் கஷ்டப்பட்டே செல்லவேண்டிய திருப்பதனாலே பர்மாதேசம் அக்காலத்தில் நமது புராணங்களில் சொல்லப்படுகிற தேவலோகமாகவே இருக்கலாமென்றே நம்புகின்றோம் ஆகவேதேவலோகத்தைச் சேர்ந்தஇரங்கூன் நகரவாசிகள் குணத்திலும் மணத்திலும் மனத்திலும் ஆயுள்விருத்தியிலும் தேவர்களைப் போலிருந்து ஜீவிப்பார்களென்று கடவுளைப் பிரார்த்திப்போமாக

சுபம்! சுபம்!!

# நாடார் மஹாஜன சங்கம் மதுரை.

## ஸ்காலர்ஷிப்.

### அறிவிப்பு.

1-7-23 முதல் 1-7-24 வரையுள்ள ஒரு வருஷத்திற்கு பட்ஜெட்டில் ஒதுக்கிவைக்கப்பட்ட ஸ்காலர்ஷிப் தொகையை கீழ்க்கண்ட மாணவ மாணவிகளுக்கு சாங்ஷன் செய்திருக்கிறோம்.

மாணவர்கள்.

| பெயர் | சொந்தவூர் | வாசிக்கும் வகுப்பு |
|---|---|---|
| வி. எஸ். கே. துரைச்சாமி | சிவகாசி | பி. ஏ. ஜூனியர் |
| டி. பால்வர்மா | தூத்துக்குடி | இண்டர்மீடியேட் ஸீனியர் |
| சி. சிவமுருகன் | சிவகாசி | டிை |
| எஸ். ராமராஜையா | சிதம்பராபுரம், நான்குநேரி தாலுகா | டிை |
| டி. பி. தெய்வபெருமாள் | பண்டாரபுரம், திருச்செந்தூர் தாலுகா | இண்டர்மீடியேட் ஜூனியர் |
| வி. ராஜாமணி | சாத்தூர் | டிை |
| எம். துரைராஜ் | விருதுநகர் | டிை |
| பெ. சொக்கலிங்கம் | தேனூர் (மதுரை) | டிை |
| | மாணவிகள் | |
| வி. இராயம்மாள் | காவல்கிணறு, நான்குநேரி தாலுகா | முதலாம் பாரம் |
| வி. ஆரோக்கியம் அம்மாள் | டிை | டிை |
| இராயம்மாள் | கள்ளிகுளம், நான்குநேரி தாலுகா | டிை |

### குறிப்பு.

இனிமேல் ஸ்காலர்ஷிப்புக்கு விண்ணப்பஞ் செய்யவிரும்பும் மாணவர்கள் வருகிற மேமாதத்தில் காரியதரிசிகளுக்கு எழுதி விண்ணப்ப பாரங்களை பெற்றுக்கொள்ளலாம். அதற்கு மத்தியில் எழுதப்படும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

மாணவிகளுக்கு இன்னும் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படும். நாலுமுதல் 6-ம் பாரம்முடிவாயுள்ள வகுப்புகளில்வாசிக்கும் மாணவிகள் சென்றஇரண்டு வருடாந்தர பரீக்ஷைகளில் பல பாடங்களிலும் எடுத்திருக்கும் மார்க்குகள் தகப்பனார்அல்லது கார்டியனின் மாதாந்த வரும்படி முதலிய விபரத்தோடு சீக்கிரமாகவிண்ணப்பஞ் செய்துகொள்ளலாம்.

## வேண்டுகோள்.

பள்ளிக்கூடங்களுக்கு பணவுதவி.

பள்ளிக்கூடம் வைத்து பராமரிக்க உதவில்லாத கிராம வாசிகளாகிய நாடார்களுக்கு பிரதம பள்ளிக்கூடம் நடத்த நமது சங்கத்திலிருந்து பணவுதவிசெய்யப்படும். பணவுதவி வேண்டுவோர் காரியதரிசிகளுக்கு உடனே விண்ணப்பஞ்செய்து கொள்ளவேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மதுரை 19-7-23.

காரியதரிசிகள்.

# இலங்கை வர்த்தமானம்.

(நமது நிருபரிடமிருந்து)

## காந்தி நாள்.

கொழும்பு ஜூலை 18—

இவ்வருடம் மகாத்மாகாந்தி திருநாள் இங்கு வெகு விமரிசையாய்க் கொண்டாடப்பட்டது. 18-ந் தேதியன்று மாலை 5-மணிக்கு பிரைஸ்பார்க் மைதானத்தில் ஓர் பெருங் கூட்டம் நடைபெற்றது- சுமார் 1500 ஜனங்கள் கூடியிருந்தனர். ஸ்ரீமான் ஏ. இ. குணசிங்கம் என்பார் பிரதமத்தில் இப்பிரபஞ்சத்தில் தற்சமயம் மகாத்மா காந்தியவர்களுக்கு நிகரொருவருமில்லை யென்றும் அம்மஹானே இயாகமூர்த்தியாக திரு அவதாரஞ் செய்திருக்கின்றனரென்றும் அப்பெரியோர் சொன்ன கடைசி வார்த்தையாகிய 'சதர்' என்பதே எஞ்ஞான்றும் நமது லக்ஷியமாகவிருக்க வேண்டுமென்றும் தமிழ் சிங்களம் இங்கிலீஷ் பாஷைகளில் ஓர்சொற்பொழிவு நிகழ்த்தினர். பின்னர் கரகோஷத்தினிடையே திருநெல்வேலி ஜில்லாக் காங்கிரஸ காரியதரிசியாகிய ஸ்ரீமான் திருகூட சுந்தரம் பிள்ளை எம். ஏ. பி. எல். இன்னிசை செந்தமிழில் தாம் மகாத்மா காந்தியடிகளின் அஹிம்ஸா தர்மத்தையும் அவர்களுடைய திரிகால சத்தியங்களையும் இந்திய மக்களுக்கு எடுத்துரைக்கவே இங்கு விஜயஞ் செய்திருக்கிறதாகப் புகன்றனர். கூட்டம் முற்றுப்பெற்றபின் திரள்திரளானஜனங்கள் நீவெட்டிகளுடன் மருதானை, போரில்லா, கால்வேப் முதலிய இடங்களில் சுற்றுப்பிரகாரஞ்செய்து வந்தேமாதரக் கோஷ்டியுடன் மகாத்மாவின் படமொன்றைச் சிங்காரித்து அதற்கு ஆரங்கள் சூழ சுயராஜ்யக் கொடிகள் சுழல ஆரவாரத்துடன் பவனிபோயினர். போலீஸ் அதிகாரிகள் குதிரைகள்மேல் சவாரிசெய்துகொண்டு பின்னாலேயேசென்றனர். யாதொருகுழப்பமுமின்றி எல்லாம் செவ்வனே நடைபெற்றது.

• • •

## முதல் இந்திய கத்தோலிக் பிஷப்.

சில வருஷங்களாக ரோமன் கத்தோலிக் கிறிஸ்தவர்களுக்குள் விசாரணைக்குருக்களாக இந்திய சுவாமிமார்களே அதிகமாய் நியமிக்கப்படல் வேண்டுமென்ற ஓர் கிளர்ச்சி பலமாக நடந்துவந்தது. அதன்பயனாக ரோமான் சபை அதிகாரிகள் பரத குலத்தவரான சங்ரோச் சுவாமியவர்களை தென்னாட்டிற்கு மேற்றிராணியாராக அபிஷேகம் செய்யப்போவதாக அறிவித்திருக்கின்றனர். ரோச் சுவாமியவர்கள் கல்வியறிவு மிக்குடையவர். உயர்ந்த குடும்பத்தைச் சார்ந்தவர். தேவதா பக்தியுடையவர் இவருடைய சகோதரர் இருவர் சுவாமிமார்களாகவேயிருக்கின்றனர். இவர்களும் ரோச் சுவாமியவர்கள் ஸைக்குள்ளேயே பிள்ளை பார்ப்பார்கள் போல் தோன்றுகிறது. மேல்கண்ட அத்தியக்ஷாதீனத்திற்கு தூத்துக்குடியே தலைநகராகவிருக்கும். இந்தகைய நியமனம் ரோமான் கிறிஸ்தவசரித்திரத்தில் ஓர்புதிய சீர்திருத்தமாகவெண்ணப்படுமென்பதற்குச் சந்தேகமில்லை.

மூன்வரின் ஊக்கம், திடசித்தம் பெருந் தன்மை கருணை வேண்டும்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## ஆரோக்கியம்.

வியாதிகளுண்டாவதற்கு காரணங்கள் என்ன? மனிதனுக்கு பலவிதமான ஆசைகளுண்டு. அவ்வாசைகளை பரிபூரணமாய் நிறைவேற்றி அதனால் வரும் பயனை அனுபவிப்பதற்கு ஆரோக்கியமில்லாமல் முடியாது. ஆரோக்கியமில்லாத ஒருவனுக்கு இவ்வுலகத்தில் யாதொரு காரியமும் நடத்த இயலாது. சுவரில்லாமல் சித்திரம் எழுதலாமா? ஆரோக்கியமில்லாத மனிதனுடைய வாழ்வு எப்பொழுதும் துன்பம் நிறைந்ததாகவே யிருக்கிறது. ஒருவன் ஐசுவரியம் நிறைந்த இராஜகுடும்பத்திலே பிறந்து சகலவித அநுபவத்திற்கும் வேண்டிய சௌகரியங்களோடு இருந்தாலும் ஆரோக்கிய மென்பது அவனுக்கில்லையானால் அவன் இவ்வுலகில் எல்லாரையும் விட நிர்பாக்கியவான் தான் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஆனால் எவ்வளவு ஏழையாய்ப் பிறந்தாலும் நல்ல ஆரோக்கியமுள்ள சரீரத்துடன் இருப்பானேயானால் அவனை பாக்கியவான் என்றே சொல்லலாம். பரிபூரண ஆரோக்கியம் உள்ளவர்கள் மிகவும் சொற்பமே: தலைவலி, காதுவலி, பல்வலி, வயிற்றுவலி அஜீரணம் இப்படிப்பட்ட இலேசான வியாதிகளில் இடர்படாதவர்கள் எவரும் இல்லையென்றே சொல்லல் வேண்டும். அதிகாலையில் நித்திரை விட்டெழுந்திருக்கும் போது மேற் சொன்ன வியாதிகளில் ஏதாவதொன்றாலோ பலவற்றாலோ பிடிக்கப்பட்டு வருகிறவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தாங்கள் அன்றைப்பகலில் செய்வதென்று ஏற்படுத்தியிருக்கும் ஜோலிகளை எல்லாம் இவ்வகை இலேசான வியாதிகளில் இடர்படுவதால் செய்யமுடியாமல் வருந்தி சரியான சுகம் அனுபவியாமல் காலத்தையும் நேரத்தையும் போக்குகின்றனர். இவ்வகையான அற்பவியாதிகளில் கூட இடர்படாமலும் நமக்கிருக்கும் இதர சுகங்களையும் சரிவர அநுபவிப்பதற்கும் வேண்டிய சரீர ஆரோக்கியத்தை எப்படி அடையலாம் என்பதை ஆராய்கின்றவர்களோ மிகவும் சொற்பம். அப்படி ஆராய்ந்து அறிந்தாலும் அதன்படி நடக்கிறவர்கள் அவரினும் வெகு சொற்பம். ஆரோக்கிய விதிகளை நன்கறிந்தவர்கள் கூட "நாம் செய்யும் இக்காரியம் நமது உடம்புக்கு யாதொரு தீங்கும் செய்யாது, என்று நினைத்து ஆரோக்கிய விதிகளுக்கு மாறுபாடான காரியங்களை செய்கிறார்கள்.

பலவிதமான பிணிகளில் வருந்தும் அநேகரை நாம் தினந்தோறும் பார்க்கிறோம். ஆனால் இப்பிணிகளெல்லாம் ஏன் உண்டாயின என்று சிந்திக்கிறவர்கள் யார்? அவர்களோ மிகவும் அரிது. அந்நோயை நன்றாய் ஆழ்ந்து கவனிக்கவேண்டிய இச்சந்தியை அசட்டை செய்து இது நம் தலைவிதி யென்றும் ஜாதகப் பலன் என்றும் புகல்சொல்லி தள்ளிவிடுகின்றனர்.

நாம் அனுபவிக்கிற சுகமும் துக்கமும் நம்முடைய செய்கைகளின் பலன்களாக வேயிருக்கிறது. நற்செய்கைகள் சுகத்தையும் தீயசெய்கைகள் துன்பத்தையும் விளைவிக்கின்றன. பலர் இதைப்பற்றி சந்தேகப்படலாம். ஏனெனில் இப்பிரபஞ்சத்தில் எல்லாச் செய்கைகளினுடைய பலன்களை உடனேக்குடன் காணுகிறதிலேயும் தீயவை செய்கிறவனை உயர் பதவியில் காணுவதிலேயும் தான். சில செய்கைகளினுடைய பலன்களை உடனே காணலாம். உதாரணமாக ஒரு பேனாக்கத்தி கொண்டு விரலைவெட்டினால் அதன் வேதனை உடனே தெரியும். உப்புத்தின்றால் உடனே தாகம் எடுக்கும். ஆனால் சாராயத்தை கொஞ்சம் கொஞ்சமாக நித்தம் தினம் சாப்பிட்டுவந்தால் அதனால் விளையும் தீங்கு உடனே தெரியாமல் காலக்கிரமத்தில் சரீரத்திலும் கேடு உண்டாக்கியிருப்பதைக் காணலாம். இதுபோலவே தீயசெய்கையில் பழகுபவர்களுக்கு வரும் பலனை உடனே காணமுடியாது. காலாவர்த்தியில் தனக்கும் பிறருக்கும் வெளிப்படையாகும். நம்முடைய முற்பிதாக்கள் அநுசரித்துவந்தபரிசுத்தமும் சன்மார்க்கமான பலவித பழக்க வழக்கங்களை விட்டுவிட்டு புதுமாதிரியான பழக்கங்களை அநுசரிப்பதனால் ஆயுள் குறைந்து அநேகமான பிணிகளுக்கும் ஆளாகி வருந்துகின்றோம்.

நம்மவரில் சிலர் தற்காலத்தில் அதிகாலையில் படுக்கைவிட்டு எழுமுன் வாய் முகம்கூட கழுவாமல் ஒரு கப் காபி (பெட்காப்பி) சாப்பிட்டால்தான் எழுந்திருக்கக்கூடும் என்று சொல்லுகிறார்கள். வேறுசிலர் தங்களுக்கு பல் துலக்கின உடனே (பெட்காப்பி டிக்காஷன்) சாப்பிடவேண்டு மென்று சொல்லுகிறார்கள்.

இல்லாவிட்டால் இவர்களுக்கு வயிற்றிலாக்கலும், தலைநோவும் உண்டாவதுடன் தங்களை ஒருவேலையும் செய்ய முடியாத நிலைமையில் ஆக்கிவிடுமாம். இன்னும் சிலருக்கு காலையில் மலசுத்தியாக வேண்டுமானால் காப்பி சாப்பிட்டதோடு கூட பீடி, சிகரெட், சுருட்டு வெற்றிலை புகையிலை இவைகளில் ஒன்றோ பலவோ அல்லாமல் முடியாதாம். ஆனால் இப்படிப்பட்டவர்களுக்கு மூத்திரசுத்தியாவதற்கு இவ்வகையான உபகரணங்கள் வேண்டியதிருப்பது இல்லாக்கியமே. ஒருநாள் கழிவதற்குள் காலை காப்பியும் பத்து மணிக்கு உப்பு, புளி, மிளகாய் சேர்த்தருசி யுண்டாக்கின பதார்த்தங்களுடன் கூடிய சாப்பாடும், இரவில் இதே மாதிரி சாப்பாடும் இடையில் பலதடவைகளில் காப்பியும் தேத்தண்ணீரும், இரவு படுக்கைக்குப் போகும்போது பாலும் சிலருக்கு இதெல்லாம் ஜீரணமாவதற்கு இடைக்கிடையே பீடி சிகரெட்டு வெற்றிலைகளும், சிலர் சாப்பிடுமுன் சுதேசசாராயமோ, பரதேசசாராயமோ அவரவர்களுடைய ஆச்சாரக் கொள்கைகளுக்கு தக்க வண்ணம், உபயோகப்படுத்தியும் வருகின்றனர். இவ்விதம் தாங்கள் தினம் தினம் உட்கொள்ளும் பதார்த்தங்களில் தங்களுடைய சரீர ஆரோக்கியத்திற்கு அவ்வளவு தேவையோ அல்லது எதேது பதார்த்தங்களில் எவ்வளவு எவ்வளவு தேவையோ, வென்று கொஞ்சமேனும் சிந்திப்பதில்லை.

## அநுபவ ஆரோக்கியவிதிகள்.

ஆகாரம்:—பசியெடுத்தாலன்றி உண்ண விரும்பலாகாது. சாப்பிடும்போது ஆகாரத்தை நன்றாய் மென்று மெதுவாய் சாப்பிடவேண்டும். அளவுக்கு மிஞ்சி சாப்பிடலாகாது. தன் வயிற்றுக்கு தொந்தரவு கொடாமல் இருக்கக்கூடிய ஆகாரம் எதேது உண்டோ அதையே சாப்பிடவேண்டும். ஆகாரங்களுக்கிடையில் பழவகைகள் தவிர வேறெதுவும் சாப்பிடலாகாது. களைப்பாயிருக்கும் போதாவது கோபமாயிருக்கும் போதாவது சாப்பிடலாகாது. மனதிருப்தியோடும் பிரீதியோடும் ஆகாரம் சாப்பிடவேண்டும். இனிப்பு பக்ஷணபதார்த்தங்களை அற்பமாய் அருந்த வேண்டும் ஆகாரம் சாப்பிடும்போது பனிக்கட்டி நீரை (ஐஸ் வாட்டர்) குடிக்கக்கூடாது.

நித்திரை:—அதிகம் பேருக்கு ஒவ்வொரு நாளும் 8 மணி நேரம் நித்திரை செய்யவேண்டியது அவசியம். "மத்தியராத்திரிக்கு முன் ஒருமணி நேரத்து நித்திரையானது மத்திய ராத்திரிக்குப் பின் இரண்டுமணி நேரத்து நித்திரைக்குச் சமம்" என்னும் முதுமொழி நோக்கற்பாலது. நல்ல காற்றோட்டமுள்ள அறையில் நித்திரை செய்ய வேண்டும். இறுகிட்ட மெத்தைமேல் நித்திரை செய்யலாகாது. இரவில் நித்திரைக்குப் போகுமுன் ஒரு மைல் அல்லது அரை மைல்தூரம் உலாத்துவது நல்லது. முதுகு படுக்கையில் படும்படி நித்திரை செய்யலாகாது.

ஸ்நானம்:—வாரத்தில் ஒரு தடவையாகிலும் எண்ணெய் தேய்த்து வெந்நீர் ஸ்நானம் செய்யவேண்டும். ஒவ்வொரு நாள் காலையிலும் ஆகாரத்திற்கு முன் குளிர்ந்த ஜலத்தில் சரீரத்தை நன்றாய் துவாலைகொண்டு தேய்த்து ஸ்நானம் செய்வதானது தேக சௌக்கியத்திற்கு மிகவும் நல்லது. அப்படி துவாலைகொண்டு தேய்த்தவுடன் சரீரத்தில் குளிர் உண்டாகிறதானால் இவ்வித ஸ்நானம் செய்யலாகாது. உடை உடுத்து முன் குளிர்ந்த அறைக்குள் செல்லவும் கூடாது குளிர்காற்று மேல்படவும்கூடாது. இரவு நித்திரைக்குப்போகுமுன் வெந்நீர் ஸ்நானம் செய்தால் நன்றாய்நித்திரைவரும்

பல்:—ஆகாரம் சாப்பிட்டு முடிந்தவுடன் வாயில் தண்ணீர்விட்டு நன்றாய் உரசி கொப்புளிக்கவேண்டும். ஒவ்வொரு நாள்காலையிலும்மாலையிலும்மிருதுவான பற்பொடி கொண்டாவது அல்லது அதற்கென்று தயாரிக்கப்பட்டு ஷாப்புகளில் கிடைக்கக்கூடியதான பசை (டூத் பேஸ்ட்) கொண்டாவது பல் துலக்கிவரவேண்டும். பற் குச்சிகள் கொண்டு பல் துலக்குவது உசிதமல்ல, பல் ஈறல்களில் கைவிரல்கொண்டு அழுத்தி தேய்க்கவேண்டும். தீராத அவசரம் நேரிட்டாலின்றி பற்களை பிடுங்கக்கூடாது.

இதரவிதிகள்:—சரீரத்திலுள்ள எல்லா பாகங்களுக்கும் இரத்தோட்டம் சரியாயிருப்பதற்காக தினந்தோறும் போதுமானதேகாப்பியாசம் செய்யவேண்டும். ஒவ்வொரு நாளும் சரியாய் மலசுத்தியாய் வரவேண்டும். காப்பி. தேத்தண்

## மதுரை.

(நமது நிருபரிடமிருந்து)

நூயம்பி—நாடார்குல வைழ்த்தொழிலாளரின் நன்மையைக் கருதி ஓர் இலவச இராப்பாடசாலை ஏற்படுத்த பிரமுகர்கள் முயன்றுவருகிறார்கள். அதன் ஆசிரியர் பதவியை ஏற்றுக்கொள்வதாய் ஸ்ரீ சண்முகநாதசுவாமிகள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

விஜயம்—நாடார்குல மித்திரன் சந்தாப்பிரயான ஏஜெண்டு ஸ்ரீமான் எஸ். செதாஸ் நாடார் இவ்விடம் விஜயம்செய்து சந்தாப்பாக்கிகளை வசூல்செய்துகொண்டு நேற்று கோவில்பட்டி வட்டகைக்கு புறப்பட்டுப்போயிருக்கிறார். மித்திரன் அபிவிருத்தியைநாடி போஷகப்பிரபுவாய்ச் சேர இவ்விடம் ஸ்ரீமான் தி. ஆ. தி. ப. அ பழனிக்குமாரு நாடார் அவர்கள் ஒப்புக்கொண்டிருப்பது போற்றத்தக்கது.

மூடப்பட்டது—ஸ்ரீ மீனாக்ஷி ஆலயத்தின் மேலவாசல் யாதுகாரணம் பற்றி

வேறு மருந்து சாராயவஸ்து எதையும் உபயோகிக்கவே கூடாது, பிரதி தினமும் கூடுமானவரையில் ஏராளமான சுத்த ஆகாயத்தை சுவாசித்துவரவேண்டும் எப்பொழுதும் மனதில் கவலை கொள்ளாமல் சந்தோஷமாகவே இருக்கப்பழக வேண்டும். ஆ. சி. ௧.

வோ மூடப்பட்டது. ஆனால் முன்போலன்றி அம்மனின் மேல்பாகத்தில் ஓர் பெரிய ஜன்னல் ஸ்தாபகம் செய்யப்பட்டிருக்கிறது

கைது செய்யப்படுதல்—இவ் வூர் கள்ளுக்கடை மறியல் விஷயமாக இதுவரை அரசாங்கத்தாரால் 112 காங்கிரஸ் தொண்டர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர். இன்னும் மறியல் வேலையும் நடந்துகொண்டிருக்கிறது.

9-வது கான்பரன்ஸ்—இதை நடத்துவதாய் ஒப்புக்கொண்ட கமிட்டியார் இதுவரை எவ்வேலையும் செய்து முடித்ததாகத் தோன்றவில்லை. இவ்விஷயமாய் மகாஜன சங்கத்தாரால் இடைவிடாது விளம்பரங்களும் தந்திகளும் அனுப்பப்பட்டு வருகிறது. காரியம் கைகூடுவதாய்க் காணோம்- காலத்தை வீண்போக்குவதைக்காட்டிலும் கான்பரன்சை மதுரையில் நடத்துவது மிகவும் நலமான காரியம் அப்படிக்கின்றி காலத்தை வீண்போக்கினால் இது விஷயமாய் இதுவரை ஏற்பட்டிருக்கிற செலவு சுமார் ரூபாய் (400-0-0) நானூறுடன் மேலும் செலவு செய்ய நேரிடுவதைத் தவிர கான்பரன்ஸ் நடத்தமுடியுமென்று உறுதியாகக்கூற மார்க்கமில்லை. சங்கநிர்வாகிகள் நன்கு கவனித்து தகுந்த ஏற்பாடுகள் செய்வார்களாக!

நமது மித்திரன்

## விசேஷப்போஷகப்பிரபு.

இரங்கூன், பிரபல வர்த்தகரும், இட்டமொழியூர் வைத்தியசாலை ஸ்தாபகரும், பர்மா, சட்டநிரூபணசபை அங்கத்தினரும், லக்ஷாதிபதியுமான ஸ்ரீமான் A V. ஜோசப் நாடார் அவர்கள்.

### போஷகப் பிரபுக்கள்.

——:()*():——

சென்னை, நாட்டாண்மை ஸ்ரீமான் நா. ஆறுமுக நாடார்.
சென்னை, ஸ்ரீமான் ஆ. ப. வை. கோதண்டராம பாண்டிய நாடார்.
கொழும்பு, ஸ்ரீமான் சி. பொ. ம. பொன்னையா நாடார் அன் பிரதர்ஸ்.

மதுரை ஜில்லாவில்.

பொட்டிப்புரம் ஸ்ரீமான் அ. இருளப்ப நாடார்.
உசிலம்பட்டி, ஸ்ரீமான் முதலாளி ப. வீ. ஆதிமுத்துமாலை நாடார்.
உசிலம்பட்டி ஸ்ரீமான் வ. அ. க. இலக்ஷுமண நாடார்.
உசிலம்பட்டி ஸ்ரீமான் கொ. க. பழனிக்குமாரு நாடார்.
மதுரை, ஸ்ரீமான் G. ஜோசப் நாடார் B. A. B. L.

திருநெல்வேலி ஜில்லாவில்.

சுவிசேஷபுரம், நாவலாசிப் டாக்டர் ஸ்ரீமான் J S. லாமெக் நாடார்.
ஆறுமுகநேரி, ஸ்ரீமான் ச. சி. பொன்னுச்சாமி நாடார்.
இட்டமொழி. ஸ்ரீமான் A. யேசுவடியான் நாடார்.
பணைக்காடு, ஸ்ரீமான் ரா. பொன்னையா நாடார்.
நாதன்கிணறு, ஸ்ரீமான் S. தங்கச்சாமி நாடார்.
கிழமங்கலூர், ஸ்ரீமான் த. ரா. ஜெபமணி நாடார்.
வைத்தங்கரைவிளை, ஸ்ரீமான் ரா. உலகநாத நாடார்.
கிழவனேரி, ஸ்ரீமான் க. ம. அந்தோணிமுத்து நாடார்.
நாங்குனேரித் தாலுகா புதூர், ஸ்ரீமான் ரா. பாக்கியநாத நாடார்.
ஆறுமுகநேரி. ஸ்ரீமான் ஆ. பொ. தங்கராஜ் நாடார்.
கொம்மடிக்கோட்டை, மெஸ்ஸர்ஸ் ச. தங்கப்பாண்டி நாடார் அன் பிரதர்ஸ்.
நடுவக்குறிச்சி, ஸ்ரீமான் ந. தி. வெள்ளையா நாடார்.
மணக்காடு, ஸ்ரீமான் ஆ. சாமிநாத நாடார்
இட்டமொழி, மெஸ்ஸர்ஸ் N. சாலோமோன் நாடார் அன்பிரதர்ஸ்.
சாத்தான்குளம், ஸ்ரீமான் தே. பே. மரியராயப்ப நாடார்.
வெள்ளாளன்விளை, ஸ்ரீமான் யோ. யோசேப்பு நாடார்.
மாளுடுதவைப்பத்து, ஸ்ரீமான் கு. ந. நவமணி நாடார்.
இராஜாவின்கோவில், ஸ்ரீமான் செ. சுடலைமுத்து நாடார்.
திருநெல்வேலி, ஸ்ரீமான் அரி. அ செண்பக நாடார்.
மாளுடுதண்டுப்பத்து, ஸ்ரீமான் சோ. செல்லத்துரை நாடார்.
திருப்பாப்பு நாடார்விளை, ஸ்ரீமான் மா. நா. ரு. நாராயண நாடார்.
சிறுநாடன் குடியிருப்பு, ஸ்ரீமான் வே. வே. சுடலைமாட நாடார்.
பெரியதண்டம்வடலி, ஸ்ரீமான் நா. ஆறுமுகநயினார் நாடார்.
சிறுநாடன்குடியிருப்பு, ஸ்ரீமான் இ. அய்யங்கண் நாடார்.
சிறுநாடன்குடியிருப்பு, ஸ்ரீமான் சு. குருஸ்வாமி நாடார்.
உடையார்குளம், ஸ்ரீமான் ஞா. யோசேப்பு நாடார்.
ஆவரைக்குளம், ஸ்ரீமான் அ. தாசிமுத்து நாடார்.

இராமநாதபுரம் ஜில்லாவில்.

வையூர், ஸ்ரீமான் வை. மு. முத்துக்குமார் நாடார் அன் பிரதர்ஸ்.
இலுப்பையூர், ஸ்ரீமான் பு. கு அ. கணபதி நாடார் அன் பிரதர்ஸ்
முத்தாதிபுரம், ஸ்ரீமான் கு. பி. பொன்னையா நாடார் அன் பிரதர்ஸ்.
முத்தாதிபுரம், ஸ்ரீமான் பெ. ப. சின்னக்காளை நாடார் அன் பிரதர்ஸ்.
முதுகுளத்தூர், ஸ்ரீமான் மா. கருப்பையா நாடார்.
அகத்தாயிருப்பு, ஸ்ரீமான் மா. க. ராமசுவாமி நாடார்.
மேட்டுப்பட்டி, ஸ்ரீமான் பெ. பிச்சார் நாடார்.
அகத்தாயிருப்பு, ஸ்ரீமான் த. வ சீ. கிருஷ்ண நாடார் அன் பிரதர்ஸ்.
கீழப்பெருங்கரை, ஸ்ரீமான் பெ. ச. மாடசாமி நாடார் அன் பிரதர்ஸ்.
செட்டியபட்டி, ஸ்ரீமான் செ. அ. சந்திவீர நாடார்.
இலுப்பையூர், ஸ்ரீமான் வே. பொன்னையா நாடார்.
பழையனூர், ஸ்ரீமான் செ. மு. சிவன் நாடார் அன்பிரதர்ஸ்.
எலிக்கநாயக்கன்பட்டி, ஸ்ரீமான் கி. ஆ. காமாக்ஷி நாடார்.
இலுப்பையூர், ஸ்ரீமான் மா. க. மதலைக்கருப்ப நாடார்.
வளநாடு, ஸ்ரீமான் சி. சாமிவய்யா நாடார்.
முத்தாதிபுரம், ஸ்ரீமான் பெ. சி. ப. முத்தையா நாடார்.
வடபட்டி. ஸ்ரீமான் அ. க. வேலாயுத நாடார்.
சிவகாசி, ஸ்ரீமான் M. தருமராஜ் நாடார் B. A. B. L.
விருதுபட்டி, ஸ்ரீமான் க. கு. பொன்னப்ப நாடார்.
அருப்புக்கோட்டை, முதலாளி ஸ்ரீமான் மு. மு. முத்துக்குமாரசாமி நாடார்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

# Sultan Abdul Cader.

Sultania Medical Hall, Porto-Novo: S. A. Dist.

துரையே !. கவனியுங்கள்.

இழந்துபோன பலத்தையும், தளர்ந்துபோன நரம்புகளையும் ஒரே வேளை லேகியம் சாப்பிட்டதும் பலத்தைக் கொடுக்கும்.

மெடல் பெற்ற

## சிட்டுக் குருவி சத்தின் லேகியம்,

இந்தச் சிட்டுக்குருவி சத்தின் லேகிய பாகத்தைப்போல் மற்ற வைத்தியர்கள் செய்து காட்டினால் 2,000 ரூ. இனும் கொடுக்கப்படும்.

☞ கண்பிற்குகந்த அன்பர்காள் ! அருமையும் பெருமையும் பேரும் கீர்த்தியும் பெற்ற இந்த அற்புத குணங்கொண்ட லேகியத்தை உபயோகித்த உத்தமர்கள் மணவாழ்க்கையிலே சுகானந்த இன்பத்தை யடைவர். ஆ! ஹா !! குணத்தால் சிறந்தது தான் என்று பன்முறையும் புகழ்வர் புருஷரென்ற இப்பூவுலகில் பிறந்து வளர்ந்துவரும் பால்ய பருவத்தில் சிற்றின்ப ஆசை யென்னும் மின்னல் போகத்தில் ஆழ்ந்து தேக சத்தாரமாகிய நாதவிந்தை செலவழித்து யௌவன பருவத்தில் வீரியவிர்த்தி குறைந்துபோக சக்தியிழந்து ஆண்தன்மையற்ற கிழவர்போல் மயங்கி நிற்கும் புருஷர்களும், வாதாதி மூவகை தோஷத்தால் உஷ்ணமுண்டாகிப் பிரமேக வெட்டைச்சூட்டால் இந்திரியம் ஜலம்போல் நீற்றுப்போகத்தில் சீக்கிரம் ஸ்கலிதமாவோரும் நித்திரையில் ஸ்கலிதமுடையோரும் சுரம் மேகம் விஷப்பாண்டு முதலிய வியாதிகளால் இரத்தங்குறைந்து நாது பலஹீனப்பட்டு நரம்புகள் தளர்ந்து பசிமந்தம் மலச்சிக்கல், இடுப்புவலி கைகாலசதி முதலிய வியாதிகளால் வருந்துவோரும் மனோசத்துவ புத்திமானரான வக்கீல்கள் குமாஸ்தாக்கள் முதலியோரும் மற்றைய வேலையில் சிரத்தையுடையோரும் உபயோகித்தால் உற்சாக சந்தோஷமடைவார்கள். புதிய யௌவனத்துடன் இரத்தவிர்த்தி, சந்தான விர்த்தி முதலிய நலன்களைப் பெறுவார்கள். சதாகாலம் இந்திரிய ஸ்தம்பன மில்லாத போகத்தில் சீக்கிரம் ஸ்கலிதமுடையோருக்கு இது ஒரு இணையற்ற பரமசஞ்சீவியாகும், மருவயஷ்டிமர்கார ஸ்திரீகளுடன் கூடித்தங்கள் பூரண ஆசையை நிறைவேற்றி சஞ்சலிக்கும் புருஷர்களுக்குச் சித்தானந்த உற்சாகத்தைக் கொடுப்பதில் பெயர் பெற்றது. பரீட்சை செய்யும் கண்பர்களுக்குப் பலனைகொடுக்கத்தக்கது. இந்த லேகியம் சாப்பிடும் விபரம் நோட்டீஸ் மருந்துடன் அனுப்பப்படும். அதில் கண்டபடி சாப்பிடவும். இந்த மெடல் பெற்ற சிட்டுக்குருவி சத்தின் லேகியம் சாப்பிட்டு குணமில்லை யென்று சத்தியமாய் சொன்னால் அவர்களுக்கு எமது கம்பெனியிலிருந்து ரூ. 1,000 இனும் கொடுக்கப்படும். ஓர் தடவை பரீட்சை செய்யவும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 40 காசு | 16 பலம் | டப்பி 1-க்கு | விலை | ரூ. | 10—0—0 |
| 20 „ | 8 „ | „ | „ | ரூ. | 5—0—0 |
| 12 „ | 5 „ | „ | „ | ரூ | 3—0—0 |

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

☞ இந்த லேகியத்துக்கு ஆர்டர் செய்யும்பொழுது இந்த பேப்பர் பெயரை குறித்து எழுதவும்.

பர்மாவுக்கு சோல்ஏஜண்டு,
பஞ்சசக்தி அண் கோ.,
நீர் 88, 89, 30 வது வீதி,
இரங்கூன்

எமது விலாசம்
எம். சுல்தான் அப்துல்காதிர்,
சுல்தானியா வைத்தியசாலை,
பரங்கிப் பேட்டை,
தென்னார்காடு ஜில்லா.



உனக்கு வேண்டியதும்,
நீ பார்க்க வேண்டு மென்று அநேக நாள தேடிய சாஸ்திரமும் இதுவே.

## சரீரமர்ம சாஸ்திரம்.

ஒரு மானிட இன்ப நூல்.

தமிழ் பாஷையில் இவ்வளவு பூர்ணமான இரகசிய சாஸ்திரம் இதுவரையில் எவராலும் பகிரங்கமாய் வெளியிடப்படவில்லை, இதில் ஸ்திரீ புருஷலக்ஷணங்களும். அவர்களது மர்ம ஸ்தானங்களின் அமைப்பும், அவைகளின் நேர்மையான உபயோகங்களும் ரதிமன்மத சிருங்கார ரஹசியங்களும், ஆண் பெண் சிசு உற்பத்திவிபாமும், ஸ்திரீ புருஷர்களுக்கு உண்டாகும் வியாதிகளும், அதைப்போக்கத்தக்க சிகிச்சைகளும மகரிஷிகளால் மர்மமாக ஆதியில் எழுதிய இல்லற இன்பங்களும, விவாகமானவர்களுக்கும் இனிமேல் விவாகம் செய்து கொள்ளும் சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றறியாத நூல் 50 சித்திரப்படங்களுடன் ரூபா 1. தபால் செலவு 7 அணா.

மாணிக்க விலாசம் பிரஸ்,
12, அருணாசல முதலி வீதி,
சவுகார் பேட்டை, சென்னை



# இரும்புப் பெட்டி

கைதேர்ந்த ஆட்களைக் கொண்டும் $\frac{1}{4}$ $\frac{3}{8}$ $\frac{1}{2}$ அங்குல கன புதுத்தகட்டினும் உறுதியாயும், அழகாயும் வேண்டிய சயிஸின் பிரகாரம் தயாராகியும் தயாரித்தும் கொடுக்கப்படும். விலை விபரம் எங்கள் கம்பெனிக்கு எழுதித் தெரிந்து கொள்ளுங்கள்.

விலாசம்

S. K. பொன்னப்ப நாடார்,
ஓர்க் ஷாப்
மெயின் ரோட்
திண்டுக்கல்



## பாரத கிறிஸ்தவ வர்த்தமானி

தமிழ் கிறிஸ்தவர்களுக்கென்று வாரந்தோறும் வெளியாகும் பத்திரிகை இது ஒன்றே. தமிழுலக முழுவதிலும் வேறில்லை. ஆகவே, ஒவ்வொரு தமிழ் கிறிஸ்தவ குடும்பத்திலும் இது அவசியம் வாங்கி வாசிக்கப்பட வேண்டியது. யாவரும் ஆதரிக்கவும் கடமைப்பட்டுள்ளார். சகல நாட்டிலுள்ள கிறிஸ்தவர்களைப் பற்றிய விபரங்கள், கதைகள், பிரசங்கக் குறிப்புகள், வியாசங்கள். உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்திகள், அதிசயங்கள், அறிவை வளர்க்கும் விஷயங்கள், விநோதசமஞ்சரி. வேத வியாக்கியானம். வைத்தியக்குறிப்பு திருச்சபை விஷயங்கள் முதலியவை வெளிவருகின்றன. நாா நேசங்களில் சமாச்சாரம் எழுதியனுப்பவும். சந்தாநேயர்கள் விளம்பரங்கள் சேகரிக்கவும் ஏஜண்டுகள் தேவை. லட்சக்கணக்கான கிறிஸ்தவ குடும்பங்களுக்கு ஏதாவது விளம்பரம் விரைவில் எட்டவேண்டுமானால் இதைவிட முக்கியமான பத்திரிகை கிடையாது. இதில் ஒரு வருஷம் விளம்பரம் செய்தால் அநுபவமையும் தெரியும். வெளிநாட்டுக்கு வருட சந்தா ரூ 5. உள்நாடுகளுக்கு ரூ 3-8-0

மானேஜர், பாரத கிறிஸ்தவ வர்த்தமானி ஆபீஸ்,
தின்னனூர். M. S. M. R-



# நாடார் பாங்கு

## லிமிட்டெட் தூத்துக்குடி,

# மூலதனம் ரூ 20,00,000

வாக்குறுதி செய்யப்பட்ட (SUBSCRIBED) மூலதனம்
(30-6-23 முடிய) ரூபா 386900
செலுத்தப்பட்ட மூலதனம்
30-6-23-முடிய) ரூபா 186152—8—0

தூத்துக்குடியில் நடந்த ஆறாவது நாடார் கான்பிரென்ஸின் தீர்மானத்தின்படி பாங்கு ஆரம்பித்து வேலை நடந்து வருகிறது. மூலதனம் ஜாஸ்தியிருக்கச்செய்தால் அதற்குத்தகுந்த லாபமிருக்கும் பங்கு எடுத்தவர்களுக்கும் அநுகூலமாயிருப்பதோடுகூட லாபத்தில் ஒருபாகம் நம் பொது நன்மைக்காக செலவிடப்படுமாதலால் நாடார்குலத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் தங்கள் சக்திக்கு ஏற்றவாறு கூடுதலான பங்குகள் எடுத்து இந்தப்பொதுக் காரியத்தை சித்திபெறச் செய்யவேண்டியது நம் கடமை. ஆகையால் காலதாமதம் பண்ணாமல் உடனே பாங்கில் பங்குகளுக்கு அப்பிளிக்கேஷன் அனுப்புங்கள் வரலாற்றுப் பத்திரிகையும் அப்பிளிக்கேஷன் பாரமும் கேட்பவர்களுக்கு உடனே அனுப்பிவிக்கப்படும்



# THE "TAMILAHAM"

## KUALA LUMPUR.

THE LEADING HIGH-CLASS TAMIL NEWSPAPER OF MALAYA.
Bi-weekly Edition Published on Mondays and Thursdays
The Cheapest and the best vernacular medium of advertisement which has a wide circulation in the Malay Peninsula, India, Burma, Ceylon, Sumatra, Borneo, French Cochin China and the Far Eastern Countries.
A boon for Advertisers and a Treat for Subscribers.
**Annual Subscription Is Only Ten Dollars or Rupees Fifteen Payable In Advance.**
FOR ADVERTISEMENT RATES PLEASE APPLY to-
THE MANAGER.
**THE "TAMILaHaM"**
19, Batu Road,
**KUALA LUMPUR,**
**Federated Malay States.**



FOUNDER OF THE ROLL BISCUITS FIRST AT MADURA.

# Best Indian Biscuits Factory.

## பெஸ்டு இந்தியன் பிஸ்கட்ஸ் பாக்டரி.

மதுரைமா நகரில், முதல் முதல் ரோல் பிஸ்கட்ஸ் கம்பெனி ஸ்தாபித்து, இந்தியா. சிலோன், முழுவதும் சுற்றுப்பிரயாணஞ்செய்து அநேக டாக்டர்களாலும், கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களாலும். டாக்டர் ஹெடின்ஸனாலும். மாணிட ஜென்மங்களாகிய நமக்கு. சுகாதாரத்துக்கு ஏற்றவைகளென்று பரிசோதிக்கப்பட்டு, தங்கம் வெள்ளி மெடல்களும். அநேக சர்டிபிகேட்களும் பரிசளிக்கப் பெற்ற ஆர். எம். எஸ். அன்ஸன்ஸ் கம்பெனியாரால் தயாரிக்கப்படுகின்ற பெஸ்ட் இந்தியன் பிஸ்கட்ஸ்களை வாங்கி உபயோகியுங்கள்.

எங்கள் கம்பெனியில் தயாரிக்கப்படுகின்ற நமது பிஸ்கட்ஸ்கள் ஆங்கிலேய சுகாதார முறைகளை அனுசரித்து, தேகத்திற்கு புஸ்டியையும் பலத்தையும் கொடுக்கக்கூடிய அநேக விதமான எஸன்ஸ்களைச் சேர்த்து சீமை பிஸ்கட்ஸ்களுக்கு சமமாகத் தயாரிக்கப் படுவதினால். அநேக வியாபாரிகள் எங்கள் கம்பெனிக்கு ஏராளமான ஆடர்கள் கொடுத்து சரக்கு தருவித்து விற்பனை செய்து வருகிறார்கள். அவசியம் எங்கள் டிரேட் மார்க்கு "இஞ்ஜின்" போட்ட பிஸ்கட்ஸ்களை கவனித்து வாங்குங்கள். வேண்டுவோர் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதினால் விலை விபர ஜாப்தாவும் கேட்லாக்கும் இனாமாக அனுப்பப்படும்.

விலாசம்,

ஆர். எம். எஸ். அன்ஸன்ஸ்
பெஸ்டு இந்தியன் பிஸ்கட் பாக்டரி,
புரோப்ரைட்டர், ராமச்சந்திரன். நற்பானையத்தெரு மதுரை.





# புதிய ஹோட்டல்.

ஐயா! தூத்துக்குடி யென்ற திருமந்திர நகரில் சாப்பாடு, காப்பி முதலியவைகள் தங்கமெச்சுமிக்க ருசியுடையன பலரால் சொல்லக் கேள்விப்பட்டு சௌகரியத்தை தர விருதுபட்டியிலிருந்து முன் வந்த எங்கள் 'நவீன சுகபோஜன சாலையை' இந்நகர் மேலூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரே மகா-ள-ள-ஸ்ரீ கனம் F S பெரையா அவர்கள் கட்டிடத்தில் ஸ்தாபனம் செய்திருப்பதால் சகல நாடார் கனவான்களும் உணவு அருந்தியெங்களை கௌரவப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். இப்படிக்கு

புரோப்ரைட்டர்கள் விருதுபட்டி. { எல். எஸ். கருப்பையா நாடார். எஸ் ராமசாமி நாடார்



# சென்னையில்.

# நாடார் போஜனசாலை.

பர்மா, பினாங்கு, சிங்கப்பூர் போகிற ஜனங்கள் தங்கிப் போவதற்குத் தகுந்த சௌகரியமுண்டு.

S, பழனியப்ப நாடார்,
மலையப்பெருமாள் வீதி கெ 69 வீடு.
பதராஸ்.


Printed and Published, By S. A. Muthu Nadar at Sri Muthumariamman Press Arappukotta

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection